குறள்நெறி

தமிழ் வாழ்க

(கட்சிச் சார்பற்ற அரசியல், இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் இயக்க வெளியீடு)

திங்களிருமுறை வெளிவருவது | ஆண்டுக் கட்டணம் ரூ. 5. | ஆசிரியர் : பேராசிரியர் சி. இலக்குவனார்

மலர் : 1 | திருவள்ளுவராண்டு 1995 பங்குனித்திங்கள் 19ஆம் நாள் (1-4-1964) | இதழ் : 6

இந்திமொழிக்குரியரல்லார் இனிக் குடியரசுத்தலைவர் ஆக இயலாது!

தமிழக மேலவையில் ஆர்க்காடு இலக்குமணசாமி முதலியார் வருமுன் காக்கும் இடித்துரை.

"நாட்டின் தலைமகனாக மதிக்கப்படுபவரும் அரசியல் சட்டத்தால் அவ்வாறு உறுதி செய்யப்பட்டிருப்பவருமான, மதிப்பிற்குரிய குடியரசுத் தலைவரின் சொற்பொழிவின்போது, சிலர், மொழி வெறியால் வெளிநடப்புச் செய்கிறார்கள் என்றால், அதை நம்மால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நமக்கு, கேட்டிராத, வியக்கத்தக்க, துன்பம் அளிக்கும் நிகழ்ச்சியாகவும் இருக்கிறது.

நான் அறிகின்றேன் - என்னால் எழுதிக்கொடுக்கக்கூட இயலும் - இதே நிலை தொடர்ந்தால், இந்தி பேசாத பகுதியிலிருந்து, குடியரசுத் தலைவராகவோ, குடியரசின் முதல் அமைச்சராகவோ யாரும் வருவதற்கு வழியின்று.

நம்மையே அடிபணியவைக்கும் ஒரு கொடுங்கோன்மை, இந்திவெறியர்களிடமிருந்து வெளிப்படுகின்றது. என்ன இருந்தாலும் கொடுங்கோன்மைக்கும் அளவுண்டு!

உணர்ச்சிகரமான ஒருமைப்பாட்டைத் தோற்றுவிக்கக் கூட்டப்பட்ட மாநாடுகள் எல்லாம், உணர்ச்சிகரமான பிரிவினைக்கு வழிகோலிவிட்டன. இந்திய ஒற்றுமை என்பது, பல பகுதிகளின் மக்களிடையே உந்தித் தோன்றும் உணர்ச்சிகளுக்கு உரிய மதிப்புத் தந்து, மதிப்பினைப் பெறுவதில் தான் உருவாதல் கூடும்."

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், உலகம் போற்றும் கல்வியறிஞர், முதிர்ந்த அரசியல் தலைவர், கட்சிச் சார்பற்ற பெரியார் கூறியுள்ள இவ்விடித்துரையை எண்ணிப் பார்க்கவேண்டும். எவ்விதத் தகுதியுமில்லாத இந்தி மொழிக்கு மட்டும் முதன்மை கொடுத்து ஏனைய தேசிய மொழிகளைப் புறக்கணிப்பதால் உண்டாகவிருக்கும் இடர்ப்பாடுகளை எண்ணாது செயலாற்றும் போக்கு உடனே தடுத்து நிறுத்தப்படுதல் வேண்டும்.

நாட்டுப் பெரியோர்களே! நல்லோர்களே! கட்சி வேற்றுமைகளை மறந்து மொழிகாக்கும் பணியில் மூந்துறுங்கள்; மானம் காக்கும் தொண்டில் வரிசையாகப் புறப்படுங்கள். தீந்தமிழ் மொழியையும், தேசிய மானத்தையும் தலைமையையும் இழந்தபின்னர் வாழ்வது எற்றுக்கு?

முதலமைச்சர் மாநாடும் இந்தி மொழியும்

(கூட்டரசன்)

மாநில முதலமைச்சர்கள் மாநாடு முடிந்துவிட்டது. இந்தியையும் ஆங்கிலத்தையும் இந்தியக் கூட்டரசின் அலுவலர்தேர்வுமொழிகளாக ஆக்குவதெனவும், இந்தியைத் தாய்மொழியாகக்கொண்டோரும் ஏனையோரும் ஒத்த நிலையில் மதிப்பெண்கள் (marks)பெறுவதற்கு வழியொன்று வகுக்கப்படும் எனவும் அம்மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தமிழக முதலமைச்சர் கூறுகின்றார். இதற்குத்தாமே பொறுப்பாளி என்றும் நம் முதலமைச்சர் அறிவிக்கின்றார். இந்தியைத்தாய் மொழியாகக்கொண்டோர் இந்தி

(அடுத்த பக்கம் பார்க்க)

இந்தி முதன்மையை நீக்க எல்லோரும் கூடுமின்

விலை 25 காசு

1 ஆம் பக்கத் தொடர்ச்சி ... ...

யில் எழுதுவதில் எளிமையும் ஆற்றலும் கொள்வர். ஆங்கிலத்தில் எவ்வளவுதான் புலமை பெற்றிருப்பினும் ஆங்கிலம் அயல் மொழிதானே, அயல்மொழியைப் பயன்படுத்துவதில் அவ்வளவு எளிமையும் ஆற்றலும் கொள்ள இயலாது. இருவகைவிடைத்தாட்களையும் திருத்துவோர் வெவ்வேறு ஆட்களாகத்தான் இருப்பர். இந்திமொழியாளர் இந்தி விடைத்தாட்களைத் திருத்துவர். ஆங்கிலப் புலமையுற்றோர் ஆங்கிலவிடைத்தாட்களைத் திருத்துவர். இருசாராரையும் ஒரே படியாக மதிப்பெண்கள் அளிக்குமாறு செய்தல் எங்ஙனம் இயலும் என்பதை அறியோம். வேண்டுமென்றால் ஆங்கிலத்தில் எழுதுவோர்க்குக் கொஞ்ச % மதிப்பெண்களைக் கூட்டிப் போடச் சொல்லலாம். அங்ஙனம் செய்வதற்கு இந்தி மொழியாளர் ஒருப்படமாட்டார். அங்ஙனம் அவர்கள் ஒத்துக்கொண்டாலும், அரசு மொழியாம் இந்தியில் தேர்வு எழுதியோர் சிறந்தோர் எனவும் அயல் மொழியாம் ஆங்கிலத்தில் எழுதியோர் தாழ்ந்தோர் எனவும் எண்ணும் உளப்பாங்கு நாளடைவில் தோன்றி, இந்தியறியாதார் இரண்டாம் நிலைக்குடி மக்களாகவே கருதப்படுவர் என்பதில் ஐயமில்லை. இவை பற்றியெல்லாம் கூட நாம் கவலைப்படவில்லை.

கூட்டரசு நாடுகளில் வழங்கும் தேசிய மொழிகளிடையே சமத்துவம் வேண்டாமா? ஒரு மொழிக்கு மட்டும் முதன்மை கொடுப்பதைத்தான் முதன்மையாக எதிர்க்க வேண்டியுள்ளது. தலைவரின் ஒற்றை வாக்கின்மூலம் அதனை அரசு மொழியாக ஆக்கிக் கொண்டு ஏனைய தேசிய மொழிகளைப் புறக்கணிப்பது கொடுமையிலும் கொடுமையன்றோ! ஏனைய மொழியாளர் பொறுத்திருப்பினும் இந்திய மொழிகளின் தாய் மொழியெனக் கருதத்தகும் தமிழ் மொழியாளர் எங்ஙனம் பொறுத்தல் கூடும்?

இந்தி முதன்மையால் தமிழின் மானமும் மதிப்பும் உரிமையும் பாழ்படப்போகின்றன. இதனைத் தெள்ளத் தெளியப் பலர் பல முறைகளில் எடுத்துக்காட்டியுள்ளனர். அங்ஙனமிருந்தும் "கடவுள் போன்று தமிழ் என்றும் அழியாது" என்று முதலமைச்சர் கூறுகின்றதை என் என்பது! அறியாதோரைத் தெளிவித்தல் இயலும்; அறிந்தும் அறியார் போன்று கூறுவோரை எங்ஙனம் தெளிவித்தல் இயலும்? விழித்திருந்தும் உறங்குவது போல் நடிப்போரை எழுப்ப முயன்றகதையாகத்தான் முடியும்.

மும்மொழித் திட்டம் என்ற பெயரால் இந்தி மொழி கட்டாயப் படுத்தப் படுகின்றது என்பதை யாரும் அறிவர். முதல் அமைச்சர் அவர்கள் கட்டாயப் படுத்தப்படவில்லை என்கின்றார்கள். சொல்லில் கட்டாயமில்லைதான். ஆனால் நடைமுறையில் கட்டாயப் படுத்துதல் உள்ளது. இந்தி மொழியை விரும்பாதார் படிப்பதற்கு மாற்று மொழியோ மாற்றுப் பாடமோ எத்தனைப் பள்ளிக்கூடங்களில் இருக்கின்றன? அவர்கள் புள்ளி விவரப்படியே 102 பள்ளிக்கூடங்களில் தான்–(90 தெலுங்கு, 9 மலையாளம், 3 கன்னடம்) இவ்வசதியுள்ளதாம். இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பள்ளிக்கூடங்களில் 100 பள்ளிக் கூடங்களில் மட்டிலும் மாற்றுப் பாடம் இருந்தால் போதுமா? ஏனைய பள்ளிக்கூடங்களில் இந்தியைப்படித்துத்தானே ஆகவேண்டியுள்ளது. அங்ஙனம் படிப்போரில் எத்துணைபேர் அதனைத் தொடர்ந்து படித்துப்பயன் பெறுகின்றனர்? கல்லூரியில் வந்ததன் பின்னர் அதனைத் தொடர்ந்து படிப்போர் விரல் விட்டு எண்ணக் கூடியவராகவே இருப்பர். இந்தியை விரும்புவோர் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டியதுதான். விரும்பாதோரை எதற்கு வற்புறுத்திப் படிக்கச் செய்தல் வேண்டும்? இதனால் ஏற்படும் பொருட் செலவு எவ்வளவு?

உலகத் தொடர்பிற்கும் அறிவியல் பெருக்கத் திற்கும் எல்லாரும் ஆங்கிலம் கற்கின்றனர். அவ்வாங்கிலத்தைக் கொண்டே மாநிலங்களுக்கு இடையே தொடர்பு கொண்டால் என்ன? ஆங்கிலம் அயல் மொழி என்றால், இந்தியும் இந்தி மொழியினர் அல்லாதார்க்கு அயல் மொழிதானே!

தமிழ் மொழியாளர் இந்தியும் ஆங்கிலமும் கற்குமாறு வற்புறுத்தப் படுகின்றார். இந்தி மொழியாளர் ஆங்கிலமும் தமிழும் கற்குமாறு வற்புறுத்தப்பட்டிலரே? அவ்வற்புறுத்தலால் பயனும் இல்லையே. பயன் அற்ற ஒன்றை வற்புறுத்தும் திட்டத்தைக் கைவிடுதலே நன்று.

ஒவ்வொருவருக்கும் அவரவர் மாநில மொழியும் ஆங்கில மொழியும் எனும் இரு மொழித் திட்டமே யாவருக்கும் ஏற்றதாகும்; பயன் விளைவிப்பதாகும். வேற்று மொழிகளைக் கற்க விரும்புவோர்க்குக் கல்லூரி நிலையில் வசதி செய்து செய்து கொடுத்தால் போதுமானது.

மாணவர்கள் இளமையில் தாய் மொழியை நன்கு கற்றுக் கொள்ளாத நிலையில் அயல் மொழிகள் இரண்டினைக் கற்குமாறு செய்தல் கொடுமையினும் கொடுமையாகும். வேண்டாத மொழிகளைக் கற்குமாறு மறைமுகமாக வற்புறுத்துதல் உலகில் வேறு எங்கணும் நிகழாத வன்முறைச் செயலாகும்.

கூட்டரசு என்று கூறிக் கொண்டு அதன்பலமொழிகளுள் ஒன்றனுக்கே முதன்மையளித்து விரும்பினால் படிக்கலாம் என்று விளம்பரப் படுத்திக் கட்டாயமாக்கிக் கொண்டு, முதலில்தேர்வு வேண்டாமென்று கூறி விட்டுப் பின்னர் தேர்வில் உட்கார்ந்தால் போதும் என்று வேண்டி, பின்னர் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் வெற்றிக்குத் துணை செய்யும் என்று விருப்பினைத்தோற்றுவிக்க முயன்று, படிப்படியாக இந்தி வன்முறையில் விரும்பாதார் மீது சுமத்தப் படுகின்றது. இன்னும் கூட்டரசு அலுவலர் தேர்வு மொழியாகவும் ஆக்கி விட்டால், பல்கலைக்கழகப்பாட மொழியாகவும் வந்து விடும். திரு சக்ளா கூறியதுபோல் ஆங்கிலத்தின் இடத்தில் இந்தி அமர்ந்துஇனிதே தனி அரசோச்சும் என்பதில் ஐயமின்று. தமிழின் நிலைஎன்ன? ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதைய வேண்டியதுதானா? தமிழ்ப் பெருமக்களே! இந்நிலையை எண்ணிப் பாருங்கள். வளமாகப் பொருளை ஈட்டிவயிறு நிறைத்து மாடமாளிகைகளில் வாழ்ந்தால் போதுமா? தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்யாது போயினும் தமிழ் நாட்டிலேனும் தனக்குரிய இடத்தைத் தமிழ் அடையுமாறு செய்தல் வேண்டாமா?

இந்தியக் கூட்டரசு வன்மையுற்று நிலைத்து அனைத்துமக்களும் ஒன்றுபட்டு வாழ வேண்டுமானால்,

1 கூட்டரசு மொழிகள் அனைத்தையும் அரசு மொழிகளாக ஏற்றல் வேண்டும்.

2 கூட்டரசு அலுவலர் தேர்வு மொழியாக அவரவர் மொழிகளே அமைதல் வேண்டும்.

(5ஆம் பக்கம் பார்க்க)

(15-3-64 இதழின் தொடர்ச்சி)

தொல்காப்பிய விளக்கம்

— பேராசிரியர் சி. இலக்குவனர்

எழுத்ததிகாரம் - நூன்மரபு

21. **இடையெழுத்து என்ப ய, ர, ல, வ, ழ, ள.**

ய, ர, ல, வ, ழ, ள என்பன இடையெழுத்துக்கள் என்று சொல்லப்படும்.

மெய்யெழுத்துக்களை வல்லினம், மெல்லினம், இடையினம் என்று வகுத்திருப்பது அவற்றின் ஒலிப்பு முறையால் ஆகும். மேலைநாட்டு மொழி நூலார் எழுத்துக்களின் பிறப்பிடத்தால் வகைப்படுத்தியுள்ளனர்.

22. **அம்மூவாறும் வழங்கியல் மருங்கின்**
மெய்ம்மயங்கு உடனிலை தெரியுங்காலை.

ஆராயுமிடத்து, அங்ஙனம் மூவினமாக வகுக்கப்பட்ட பதினெட்டு மெய்களும், மொழிப்படுத்தி வழங்குமிடத்து, தன்னேடுதான் சேரும் உடனிலை மயக்கும். பிறமெய்யோடு சேரும் மெய்ம்மயக்கமும் என இருவகைப்படும்.

கட்டு : உடனிலைமயக்கம் : தன்னெடுதான் சேர்ந்துள்ளது.

பங்கு : மெய்ம்மயக்கம் : பிறமெய்யோடு சேர்ந்துள்ளது.

23. **ட, ற, ல, ள என்னும் புள்ளிமுன்னர்க்**
க, ச, ப, என்னும் மூவெழுத்து உரிய.

ட், ற், ல், ள் என்று சொல்லப்படும் மெய்யெழுத்துக்களோடு க, ச, ப எனப்படும் மூன்றும் சேர்ந்து வரும்.

காட்டு : கட்க., கற்க.. செல்க , கொள்க.

24. **அவற்றுள்,**
ல ள ஃ கான் முன்னர் ய வ வும் தோன்றும்.

மேற்கூறிய நான்கு மெய்களுள், ல, ள என்பனவற்றின் பின்னர் ய, வ இரண்டும் வரும்.

காட்டு : கொல்யானை., கோல்வளை.
வெள்யானை., வெள்வளை.

25. **ங, ஞ, ண, ந, ம, ன எனும் புள்ளிமுன்னர்த்**
தத்தம் மிசைகள் ஒத்தன நிலையே.

ங, ஞ, ண, ந, ம, ன என்று சொல்லப்படும் மெய்யெழுத்துக்களுக்குப் பின்னர், நெடுங்கணக்கு வரிசையில் தத்தமக்குமுன் உள்ள எழுத்துக்களோடு சேர்ந்துவரும்.

ங், ஞ், ண், ந், ம், ன் என்பனவற்றுக்குப் பின்னர் முறையே, க, ச, ட, த, ப, ற என்பன வரும்.

இந்நூற்பாவால், தொல்காப்பியர் காலத்தில் கங, சஞ, டண, தந, பம, றன என எழுத்துக்கள் முறைப்படுத்தப்பட்டிருந்தன என்று அறியலாம்.

26. **அவற்றுள்,**
ண ன ஃ கான் முன்னர்க்
க, ச, ஞ, ப, ம, ய, வ, ஏழும் உரிய

மேற்கூறப்பட்ட மெல்லின மெய்கள் ஆறனுள், ண, ன என்னும் இரண்டின் பின்னர், க, ச, ஞ, ப, ம, ய, வ எனும் ஏழும் வரும்.

காட்டு : உண்கலம், புன்கண், வெண்சாந்து, புன்செய், வெண்ஞாண், பொன்ஞான், வெண்பலி, பொன்பெரிது, வெண்மாலை, பொன்மாலை, மண்யாது, பொன்யாது, மண்வலிது, பொன்வலிது.

27. **ஞ, ந, ம, வ என்னும் புள்ளிமுன்னர்**
யஃகான் நிற்றல் மெய்பெற்றன்றே.

ஞ, ந, ம, வ என்று சொல்லப்படுகின்ற நான்கு மெய்யெழுத்துக்களின் பின்னர் 'ய' வரும்.

காட்டு : உரிஞ்யாது, பொருள்யாது. திரும்யாது, தெவ்யாது.

28. **மஃகான் புள்ளிமுன் வவ்வும் தோன்றும்.**

'ம்' என்னும் மெய்யெழுத்தின் முன்னர் 'வ' வரும்.

காட்டு : தரும்வளவன்

29. **ய, ர, ழ வென்னும் புள்ளி முன்னர்**
முதலாகு எழுத்து ஙகரமொடு தோன்றும்.

ய், ர், ழ் என்னும் மெய் எழுத்துக்களுக்குப் பின்னர் மொழிமுதலாக வரும் எனக்கூறப்பட்டுள்ள க, ச, த, ப, ஞ, ம, ந, ய, வ எனும் ஒன்பது மெய்களும், 'ங' வும் வரும்.

காட்டு : வேய்கடிது, வேர்கடிது, வீழ்கடிது,
வேய்சிறிது, வேர்சிறிது, வீழ்சிறிது,
வேய்தீது, வேர்தீது, வீழ்தீது,
வேய்பெரிது, வேர்பெரிது, வீழ்பெரிது,
வேய்ஞான்றது, வேர்ஞான்றது, வீழ்ஞான்டது,
வேய்நீண்டது, வேர்நீண்டது, வீழ்நீண்டது
வேய்மாண்டது, வேர்மாண்டது, வீழ்மாண்டது
வேய்யாது, வேர்யாது, வீழ்யாது
வேய்வலிது, வேர்வலிது, வீழ்வலிது

30. **மெய்நிலை சுட்டின் எல்லாவெழுத்தும்**
தம்முன் தாம் வரும் ர, ழ, அலங்கடையே.

சொற்களில் மெய் எழுத்துக்கள் நிற்கும் நிலையை அறிந்தால், ர, ழ எனும் இரண்டும் ஒழிந்த ஏனையவெல்லாம் தம்முன்தாம் வரும். ர, ழ இரண்டும் பிற மெய்களோடுதான் வரும். தம்முன் தாம் வரா,

31. **அ இ உ அம்மூன்றும் சுட்டு.**

அ, இ, உ எனும் மூன்று உயிர்களும் சுட்டுப் பொருளில் வருங்கால் சுட்டெழுத்துக்கள் என்னும் பெயர்பெறும்.

காட்டு : அம்மாடு
இம்மாடு
உம்மாடு

(தொடரும்)

(15—3—64 இதழின் தொடர்ச்சி)

அலுவலகங்களில்

ஆட்சித்தமிழ்

— க. சகன்னுதன்

எந்த அலுவலரும் அலுவலகக் கட்டுகளில் எழுதுகோலை வைக்கும் பொழுது அவர்கள் மனத் திரையில் என்ன எழுத விழைகிருரோ அதற்குரிய தமிழ்ச் சொற்கள்தாம் முதலில் வந்து நடமாட வேண்டும். அப்பொழுது தான் சீரிய முறையில் எளிதாகத் தமிழில் குறிப்புக்களோ, வரைவுகளோ எழுத முடியும். ஆனல் நடைமுறையில்நேர்மாருன நிலைதான் நிலவுகிறது.

முதலில் ஒரு அலுவலர் அலுவலகக் கட்டில் எதை எழுத வேண்டுமென விரும்புகிருரோ அதற் குரிய ஆங்கிலச் சொற்கள்தாம் பழக்கத்தின் காரண மாக அவரது நெஞ்சில் இழையோடுகின்றன. அந் தச் சொற்களுக்குப் பின்பு சரியான தமிழ்ச் சொற் களைத் தேடிக் கண்டு கொண்டபின் அப்படியே ஆங்கிலத்தின் மொழி பெயர்ப்பாக எழுத முற்ப டுகிருர். அப்படி எழுதும் தமிழ், தமிழாக இருப் பதில்லை.

எடுத்துக் காட்டாக, ஒரு அலுவலகத்திற்குச் செல்ல வேண்டிய கடிதம் ஒன்று, இன்னெரு அலு வலகத்திற்குத் தவருக வந்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். அந்தக் கடிதத்தை மு றைப்படி இலக்க மிட்டு, குறிப்பிட்ட எழுத்தருக்கு அனுப்பினல், அவர் அதைத் தன்பதிவேட்டில் பதிந்து மேல் நடவடிக்கை எடுக்க முயல்கிருர். அந்தக் கடிதம் தவருக வந்து விட்டதால் உடனே ஒரு குறிப்புடன் திரும்பியனுப்புதல் ஒன்று தான் அவர் செய்ய வேண்டியது. அதற்கு ஆங்கிலத்தில் எழுதுவதானுல் "Missent, Retransmitted" என்று வழக்கமாக எழுதுவார். ஆனல் தமிழ் நடை முறைக்கு வந்துவிட்டதால் தமிழில்தானே எழுத வேண்டியிருக்கிறது என்று எண்ணுவாராகி எழுத முயல்கிருர். ஆனல் மேற்கூறிய ஆங்கிலச்சொற் கள் முன்னின்று தாளமிடுவதால், அவற்றிற்குரிய தமிழ்ச்சொற்கள் எவை என்று எண்ணிப் பார்த்து அப்படியே மொழி பெயர்த்து,

"தவருக அனுப்பப்பட்டது, திருப்பி அனுப் பப்பட்டது" என்று எழுதுகிருர்.

இப்படி எழுதினல் இது சரியான தமிழாகிவிடு மா? தவிர, எடுத்த எடுப்பிலேயே பிறர் செய்த ஒரு தவற்றைச் சுட்டிக் காட்டுவதுபோல இருப்ப தோடன்றி, காலத்தாழ்வும் ஆகிறது. படிப்பதற் கும் என்னவோபோல் இருக்கின்றது. இப்படிக் காலத்தையும் வீணுக்கித் தமிழையும் சுவையற்ற தாக்குவதற்கு அடிப்படையாக அமைந்தது அலுவ லர்களின் நெஞ்சிலே ஊறிப்போன ஆங்கிலச்சொற் களும், அவற்றை உதறித்தள்ளுகின்ற மனப்பக்கு வம் அரசாங்க அலுவலர்களில் பெரும்பாலோரிடை யே வளராததும்தான்.

இதையே அந்த அலுவலர், ஆங்கிலத்தை முற்றும் மறந்தவராக, தமிழிலேயே சிந்தித்துப் பேசப்பழகிக்கொண்டால், எளியநடையில் தமிழில் தன் உறவினருக்குக் கடிதம் எழுதுவதுபோல எழுதி அனுப்பிவிடமுடியும். தமக்கு வரவேண்டி யஒரு கடிதம் அதே தெருவில் தன் பெயருள்ள மற்ருெருவர் கைக்கு மாறிவிட்டது என்ருல், அவர் எப்படித் தன்னிடம் வந்து 'ஐயா, இக்கடிதம் உங் களுடையது. எனக்கு வந்துவிட்டது" என்றுகூறிப் பண்புடன் கொடுத்துவிட்டுச் செல்வாரோ, அதே பண்பைத் தமிழாட்சி நடைமுறையிலும் காட்ட லாமே!

(தொடரும்)

சின்னச்சாமி

திருச்சியிலே மாண்டவனே! செந்தமிழே! சின்னச்சாமி!
ஆருத துயரளித்து அன்னைமொழி காத்தவனே!
கருகாமல் தமிழ்வாழ கொடுத்தாயே உந்தனுயிர்!
திருவாளா! நின் புகழ் வாழ்க!

மொழிகாக்க மாண்டவனே! முத்தமிழே! சின்னச்சாமி!
மூழ்கினையே தீச்சுடரில் அமிழ்தெனும் தமிழ்காக்க!
வாழ்க தமிழ்! ஒழிகஇந்தி! என்ருயோ மாளும்போது!
எழுச்சியெனும் 'தீ'யதனை வைத்துவிட்டாய் எம்முளத் தில்!

பைந்தமிழாம் பழுதறு நம் அன்னைமொழியை
இந்தியெனும் அயல்மொழி அழித்திடும் செயல்எண்ணி
சிந்தினையே உந்தனுயிர்! தமிழ்ச் செம்மால்!
உந்தன் செயலால் நம்மவர் இதயங்கள் திறக்கட்டும்!

வான்புகழ் குறளளித்தான் தெய்வப்புலவன் திருவள்ளுவன்!
அன்னவன் இல்லை என்று எண்ணிவிட்டோம்!
சின்னச்சாமி! நீ வந்தால் அவனுருவில்!
மன்னவனே! தமிழுக்கு உயிரளித்த மாணிக்கமே!

வேங்கைகளாய் வாழ்ந்திருந்த தமிழ் மக்கள்
மூங்கைகள் போல் வாழ் கின்ருர் இந்நாளில்!
எங்கள் உள்ளத்தை திறந்து வைத்த உத்தமனே!
தங்கமே! வாழ்க நின் புகழ்! வளர்க தமிழ்!!

— பி. சு. நங்கப்பாண்டியன்

திருவள்ளுவரின் 2000 ஆண்டு நிறைவு விழா.

இப்பொழுது நடைபெறுவது திருவள்ளுவ ரின் ஆண்டு 1995 ஆகும் இன்னும் ஐந்து ஆண்டுகள் கழிந்ததும் இரண்டாயிர ஆண்டு நிறைவுறுகின்றது. இவ்விரண்டாயிர ஆண்டு நிறைவை நாடெங்கும்–உலகெங்கும் தக்கமுறை யில் கொண்டாடி வள்ளுவரின் சீர்த்தியை வையகமெங்கும் அறியச்செய்தல் தமிழ்மக்களின் தவிர்க்கலாகாக் கடனுகும். இவ்விழாவை எவ் விதம் கொண்டாடலாம் என்பதற்குரிய கருத் துக்கள் வரவேற்கப்படுகின்றன. அறிவிக்க விரும்புவோர் "குறள் நெறி"க்கு எழுதுமாறு வேண்டப்படுகின்றனர்.

4ஆம் பக்கத் தொடர்ச்சி ... ...

என்ற தனியாட்சி முழக்கம், இந்தி வெறி, பிறர்களை அடிமையாக்கிநாட்டு ஒற்றுமையைக் குலைக்கும் கொடுமை அல்லவா? இதுபோல். எத்தனையெத்தனை நேர்முக வெறிச் செயல்கள்! மறைமுக சூழ்ச்சித்திட்டங்கள். நாட்டுப்பற்றை எரித்துச் சாம்பலாக்க. 'இந்தி' அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள், ஒன்று இரண்டா? அன்பரவர்கள். இவையனைத்தையும். சமன்செய்து சீர் தூக்கும்கோல்போல் அமைந்து, சிந்தித்துப் பார்ககவேண்டும் என்று பணிவோடு வேண்டிக் கொள்கிறேன். வணக்கம்.

பேர் வாழ்வும் பாதிக்கத்தான்செய்யும் என்பதை மறுக்க முடியுமா?

4. கோவில்களில் ஆரிய மந்திரம் நுழைந்து தமிழைக் கெடுத்தது.

திருமணங்களில் ஆரிய மந்திரம் நுழைந்து தமிழ் அறவுரையைக் கெடுத்தது.

இலக்கியங்களில், தமிழ் நடைகளில். தமிழ்ச்சொல் எது பிற சொல் எது! எனக்காண முடியாத அளவு நுழைந்து தமிழ் உணர்வைக்கெடுத்தது ஆரியம்.

பரவத் தொடங்கிய காலத்து உருதுவும் உடன் நுழைந்தது. இன்று அத் தமிழர்களின் தாய்மொழி உருதுவாகி தமிழைப் படித்துணரும்நிலை அமைந்துள்ளதைக்காணும்போது இந்தி நுழைவால் தமிழ் கெடும் என்ற உண்மை எவருள்ளத்தும் பசுமரத்தாணிபோல் பதியத்தானே செய்யும். இதில் போலி மனச்சாட்சிக்கு இடமுண்டா?

7 பொதுவாக தாங்களும் பிறரும் வேண்டாத இந்தியை, ஆட்சி மொழியாக்க வேண்டும் என்ற ஒரு சிலர் விருப்பத்தின் காரணம்தெளியாத ஒரு கட்சியினர், இந்திவேண்டுமென்பதை பிரிவு எண்ணம்எனக் காணமல், இந்தியால் தமிழ் கெடும் எனக் கண்டுணர்ந்து கூறுவோர்களை, ஒரு கட்சியினர் வளர்ச்சி எனக் கூறுவது, மொழியால், மரபால், நாட்டின் உரிமையால் விழிப்படைந்து வாழுவோர்களை வெளியேற்றுவதாகக் கூறி மிரட்டுவது புறக் கூற்று என்பதை இப்போதாவது உணருகிறீர்களா?

அன்பு நிறைந்த -பாரதம், எம். சி. லிங்கம் அவர்களே, என் கருத்தைச்சற்றுசிந்தித்துப்பார்த்து கண்டிக்க வேண்டிய பகுதி இருப்பின் கண்டித்துஉடனே பதில் கூற எதிர்பார்க்கிறேன். உங்கள் பெயர் முன் ஏன் பாரதம் எனச்சேர்த்துக் கொண்டீர்?

பாரதம் என்பது இந்நாட்டின் பொதுப்பெயர் என்றுஎங்குக்கண்டீர்? தமிழ் இலக்கியங்களிலா? மரபு வழக்குகளிலா? பார்-அதம் என்ற சண்டை நூல்பெயரிலா? 'எம்-சி.' என்றது உங்கள் தந்தையின் பெயர் முதலெழுத்துதானே? அது ஏன் தமிழாக இல்லாமல் பிற மொழியால் மறைந்தது?

உங்கள் ஒரு பெயருள், ஆங்கிலமும் இந்தியும் நுழைய இடம் பெற்றதென்றால்ஏன் தமிழைக்கெடுக்காது? சிந்தியும்.

(அடுத்த பக்கம் பார்க்க)

இந்தியை விரும்பும் செந்தமிழ் நண்பரே ஐயம் தெளிமின்.

—(பரணி பாடிய கவிஞர் அரங்கசாமி. இராசிபுரம்)—

ஒருவன் பிறப்பால் தமிழனுயும், மொழியால் தமிழனுயும் இருப்பானுகில் அவன் நாடு எப்பெயரால் வளரும்?

தேசியப் பற்றினுல் அந்தந்த நாடு வளம் பெறவேண்டுமே தவிர பல கண்டத்தை இணைக்க முடியுமா?

இந்தியாஎன்பது இந்நாட்டின் பொதுப்பெயர் என்று இலக்கியச் சான்று உண்டா?

நேருவைத் தலைவராகக் கொள்வதும் காமராசரைத் தலைவராகக் கொள்வதும் அவரவர் விருப்பம். அதனுல் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதன்று.

மொழியால் தமிழைப் பெற்று, நாட்டை இந்தியா என்றுல், இந்தி மொழி, ஆட்சி மன்றமேறி, தமிழை வீட்டுமொழியாகக்கூட இருக்க வொட்டாமல் அழிக்கும்.

1. இந்தி எனும் வடமொழி தமிழகத்தே சுமார் ஆயிரமாண்டுகளுக்கு முன்பே வகுப்பு மொழியாக நுழைந்து, செந்தமிழைக்கலவைத் தமிழாக்கி தமிழன் 100-க்கு 7 பேர்கூடப்படித்தவனுகஇல்லாத அளவு கெடுத்தது.

இன்று இந்தி ஆட்சிமொழியாக வருகிறது என்ற உணர்ச்சியை ஊட்டி, தமிழ் படிக்க விரும்பும் இளைஞர்களை இந்திபடிக்கத்தூண்டுகிறது. இனி இந்தி ஆட்சியேறினுல் தமிழுக்கு இடம் இன்றி வீட்டு மொழியாகக் கூட இல்லாமல், ஆங்கிலோ இந்தியர் மாதிரி, குரம்பர் தமிழ் மாதிரி, சிரழிந்து விடும் என்பது உறுதி.

2. இந்திய நாட்டிலுள்ள மாநிலங்களின் தொடர்புக்கு ஏற்ற மொழி தமிழ் தான்: இந்தியன்று. பண்டைக்காலத்தில் நாவலந்தீவு என்ற நிலையில் தமிழ்த்தாய் மொழியாக எல்லா நாட்டினரும் ஏற்கதமிழாட்சி நடந்ததை மறுக்க முடியாது. இன்று இந்தியைத் தாய் மொழியாகக்கொண்ட நாடுஇல்லை. இந்தி பேசும் நாடு நான்கு என்றுலும் அங்கும் பல மொழி பேசுவோரும் உண்டு.

3. தமிழ் நாட்டில் உயர் நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், மட்டுமன்று; திண்ணைப் பள்ளிகளிலும். தனி வகுப்பு முறையிலும், இந்தி நுழைந்து வளருகிறது அது வளர்ந்து ஆட்சி ஏறினுல் இன்று படித்துப்பட்டம் பெற்று நீதி செலுத்தும் அத்தனை

கீதைபோன்ற ஆரியச்சுலோகம் எளிதென்றும் தமிழ்ச் செய்யுள் நடை கடினமென்றும் தமிழர்களுக்கு அச்சம் பிறந்தது.

தமிழர்களின் வாழ்வு முறைஎது என அறிய முடியாதபடி வடமொழிச்சடங்குகள் மறைத்து விட்டன.

ஊர்ப்பெயர், ஆட்பெயர், பொருட்களின் பெயர் இறைவனின் பெயர், ஆண்டு திங்கள் நாள், முதலிய பெயர்கள் தமிழாக இல்லாமல் ஆரியம்மறைத்தது

இவைகளை மறுக்கிறீர்களா?

5. பிறமொழிகள் எனப்படும் ஆங்கிலம் இந்தி என்ற இவைகளால்தாய் மொழிக்கு சிறப்பு அமையாது, எனினும், இந்திப் பயிற்சி சில மாநிலங்கட்கு மட்டுமே பயன்படும். ஆங்கிலப் பயிற்சி உலகம் முழுவதுக்கும்பயன்படும்.

திருக்குறள் இரண்டாயிரமாண்டு தமிழில் இருந்தும் ஆங்கிலேயர்கள்கண்டபிறகேஉலகம்முழுதும் பரவமுடிந்தது. இதை மறுக்கமுடியுமா? ஆயினும் குறளுக்காகத் தமிழ்ப்படிக்கபெரும் பாலோர் முன் வரவில்லை.

6. இந்தி நுழைவால் தமிழ் அழியும் என உறுதி கூறலாம். எப்படியெனில், இங்குள்ள தமிழரிடை மகமது நபிநாயகத்தின் கொள்கை

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் மாநாடும் ... ...

3 விரும்புவோர்க்கு வேற்று மொழிகளைக்கற்கும் வசதி செய்து தரல் வேண்டும்.

4 எந்நிலையிலும், மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ, விரும்பாத மொழிகளைக் கற்றலை வற்புறுத்துதல் கூடாது.

5 இன்றுள்ள சூழ் நிலையில் ஆங்கிலத்தையே உலகத்தொடர்பு மொழியாகவும் மாநிலத் தொடர்பு மொழியாகவும் கொள்ளுதல் வேண்டும். இவ்வைந்துமே இந்நாட்டில் நல் அமைதியையும் ஒற்றுமையையும் உண்டாக்கும் ஐந்து ஒழுக்கக் (பஞ்சசீலக்) கொள்கைகளாகும்.

(ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐயா! குறள்நெறிக் கருத்தரங்கத்தில் ஒரு அன்பர் விடுத்த வினுக்களுக்கு விடையாக எனது கருத்துக்கள்.

அவ்வன்பர் துவக்கத்தில் "பிறப்பால் தமிழன், மொழியால் தமிழன்; என் கதை, கட்டுரைகளில் தமிழ் தவிரப் பிற மொழிச் சொற்கள் இடம் பெரு!" எனக்கூறிவிட்டுப் பல பிற மொழிச் சொற்களைப் பயன் படுத்தியுள்ளார் என்பதை முதற்கண் அன்பர் தெரிந்துகொள்வது, அவர் எடுத்துக்கொண்டசெயலுக்கு மிக வேண்டற்பாலதாகும்.

— ச. சிவசங்கர்.

1. ஒரு காலத்தில் ஆண்டமொழியாக இருந்த தமிழ், வெள்ளையன் காலத்தில் இரண்டாந்தர மொழியாக ஆகியது. வெள்ளையன் சென்றபின் காங்கிரசு ஆட்சிஅமைந்தபின் இப்பொழுது மூன்ருந்தர மொழியாக ஆக்கப்பட்டிருக்கின்றது. எடுத்துக்காட்டு :- அஞ்சலக அறிவிப்புப் பலகைகள், புகை வண்டி நிலையங்கள், இன்னோரன்ன அரசு அலுவலகங்கள். சென்ற ஆண்டு வரை, முதலில்ஆங்கிலமும், இரண்டாவது தமிழுமாக இருந்தன. இப்பொழுது முதலில் இந்தி, இரண்டாவது ஆங்கிலம் மூன்ருவது தமிழ் இந்நிலையை இவ்வன்பர் கண்ணுல் காணவில்லையோ? இப்படி தமிழுக்குமூன்ருவதுஇடம் தரப்படுவது எங்கே? தமிழ் நாட்டில் இது தமிழ் அழியும் வகையை காட்ட வில்லையா? இது வரை விருப்பப்பாடமாகஇருந்தது இந்தி: இப்பொழுது தேர்வெழுதும் மாணுக்கன் கண்டிப்பாக இந்தித்தேர்வெழுதியே தீர வேண்டுமென ஆளுபவர் கட்டளையிட்டிருக்கின்றனர். இப்பொழுது எழுதித் தீர வேண்டுமென இட்டிருக்கும் கட்டளை, நாளை ஒவ்வொரு மாணுக்கனும் குறிப்பிட்ட தேர்வெண் இந்தியில் பெற்ருல்தான் தேர்வில் தேற முடியும் என்று உரைக்காது என்பதற்கு என்ன உறுதி? இது தமிழ் மொழியை அழிக்கும் வகையைச்சேர்ந்ததல்லாமல்வேறென்ன?

2. ஏனையா, அது தமிழாக ஏன் இருக்கக்கூடாது? தமிழை விட எந்த வகையில் சிறந்தது இந்தி மொழி? உலகத்தோடு இணைந்து செல்ல ஒவ்வொரு மாநிலத்தாருக்கும் ஆங்கிலம்தேவை. இந்தி மொழி பேசும் மாநிலத்தார் வெளி நாட்டுத் தொடர்புக்கு ஆங்கில மொழி கற்றுத் தீர வேண்டும். அதே போன்று தமிழ் நாட்டாரும் வெளி நாட்டுத் தொடர்பிற்கு ஆங்கிலம் கற்றுத் தீர வேண்டும் இப்படி ஒவ்வோர் மாநிலத்தாரும் கற்க வேண்டியுள்ளது. இப்படி வெளி நாட்டுத் தொடர்பிற்காகக் கற்றிருக்கும்ஆங்கில மொழி கொண்டு நாம் ஒவ்வொருவரும் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாதா? இல்லை,வெளி நாட்டுத் தொடர்பிற்கும் இந்தி மொழியே போதும் என்று இவரால் கூறிவிட முடியுமா? தமிழ் நாட்டான் தன் நாட்டில்பேச ஒரு மொழி, அண்டை மாநிலத்தோடு பேச வேறொரு மொழி, வெளிநாட்டாருடன் பேச மூன்ருவதாக ஒரு மொழி, ஆனல் இந்தி பேசும் மாநிலத்தார் மட்டும்- தன்னுட்டிற்கும் பக்கத்து மாநிலத்திற்கும் இந்தி வெளி நாட்டுத் தொடர்பிற்கு ஆங்கிலம். இடர்பாடு யாருக்கு மிகுதி? எந்த மொழியைச் சேர்ந்த மாணுக்கர்கள் கல்வித் துறையில் சிறந்து விளங்க முடியும்? ஆகவே மாநிலத் தொடர்பிற்கு இந்தி மொழி நமக்குத் தேவையில்லை.

3. மறைந்த பின்தான் அது பற்றிப் பேச வேண்டு மென்பது பொருந்தாக்கூற்று. ஒரு மனிதனின் உடலில் நோயின் அறிகுறி தெரிந்தவுடன் அதை நீக்குவதற்கான முறையை மேற் கொள்வது தான் அறிவுடையார் செயல் — வள்ளுவரும் இதனையே வலியுறுத்தி-வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்-வைத்தூறு போலக்கெடும்- எனக்கூறியுள்ளார். எனவே உடலிலுள்ள ஏதாவது ஒரு பகுதியை இழந்த பின்தான் அந்நோயை நீக்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கூறுவது அறிவுடையோர்செயலாகாது.

4. பள்ளியில் பயிலும் மாணுக்கர் அனைவரும் பிற மொழி கற்ருற்ருன் ஒரு மொழி உலகப் புகழெய்து மென்பது விந்தையான கூற்று. தன் மொழி உலகப் புகழெய்த வேண்டு மென்பதற்காக எத்தனை மாணுக்கர் கற்கின்ருர்! அப்படிக்கற்கும் மாணுக்கர், இந்தியென்ன, எந்த மொழியையும் கற்கட்டும்! அதை யார் மறுத்தார்? "இந்த வகையிற்ருன் திருக்குறள் உலகப்புகழ் கண்டுள்ளது" என்கின்ருர்.

இன்று உலகப் புகழ் திருக்குறள் கண்டுள்ளதற்கு எத்தனை பேர், இந்தியில் புலவராகி உலகப்புகழ் பெற வைத்தார்·மொத்தத்தில் இந்தியால் தமிழருக்கு இன்னலே தவிர நன்மை இல்லை என்பதைத் தெளிவாக உணர வேண்டும்.

இறுதியாக இந்தியால் தமிழுக்கு சிதைவு வராமல் காக்க வேண்டுமென்று தமிழுணர்வு கொண்டோர் கூறுவதை, ஒருசிலகட்சிக்கு வளர்ச்சியைத் தரும் என்கின்ருர். இது விந்தையிலும் விந்தை! தமிழைக் காக்க வேண்டு மெனக்கூறினல் அது ஒரு கட்சிக்கு வளர்ச்சியாக அமையு மென்ருல் அக்கட்சி வளரட்டுமே! தமிழைக்காக்கவேண்டுமெனக் கூறு வாரை யெல்லாம் ஒரு கட்சியின் சார்புடையாரெனக் கூறி, இவரே அக்கட்சிக்கு வளர்ச்சியை உண்டு பண்ணி விடுவார் போலிருக்கிறது! இது கட்சி சார் பற்று நடு நின்று கூறும் மொழிக் கூற்றே தவிர ஒரு சார்புடையதன்று என்பதனை நண்பர் தெளிவாக உணர வேண்டு மென்று அன்புடன் வேண்டுகின்றேன்.

———

பி. சு. தங்கப்பாண்டி

குலசேகரப்பட்டி

1. 'இந்தி படித்தால்தான் நடுநிலையரசில் பதவிகள் பெறமுடியும்' என்ற உணர்வு மாணவ உள்ளங்களில் தூண்டப்படுகிறது. நம்மவர் படிப்பது பதவிக்குத்தான்; அறிவோடும் தன்மானத்தோடும் வாழவல்ல. இதனுல் தமிழார்வம் கொண்டோரும், தமிழால்பயனில்லையோ? என்று எண்ண வேண்டியுள்ளது. இதற்குத் தமிழ் அழிந்ததோ. இல்லையோ, தமிழை வளர்க்க வேண்டியோரின் உள்ளங்கள் அழிந்ததாயின, அழிகிறது; இதே நிலைமை நீடித்தால் அழியும்.

2. இந்தியா ஒரு தனியாட்சி நாடாக இருந்தால் மாநிலங்களின் தொடர்பிற்குரிய மொழி இந்திதான். அதை ஒப்புக் கொள்வது தவறல்ல. ஏனெனில் தனியாட்சி தானே! ஆனல் இந்தியா உரிமை நாடாக, மக்களால் மக்களுக்காக ஆளப்படும் நாடாக உள்ளது. இங்கு பேசப்படும் மொழிகள் அத்தனையும் சம மதிப்புப் பெற வேண்டும். மேலும், மாநிலங்களின் தொடர்பிற்குரிய மொழியாகவும், அதே சமயத்தில் அது உலகத் தொடர்பிற்கும், விஞ்ஞான வளர்ச்சிக்கும் உரிய மொழியாகவும் இருத்தல் அவசியம். அதற்கேற்ற மொழி ஆங்கிலம் தான். அதை மாற்றி இந்தியை அந்த இடத்தில் அமர்த்துவது கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்து அது உருகி, அதன் பின்னல் கொக்கைப் பிடிப்பதுபோன்ற அறிவுடைமையே!

3. தமிழனுய்ப் பிறந்தவர்கள் தமிழைக்கற்று, தமிழ்ப் புலமை மிகுந்து, தமிழோடு பிற மொழிகளிலும் புலமை மிகுந்து வாழ்வது தவறல்ல. ஆனல் தமிழை மறந்து, ஏன்? அவமதித்து, இந்தியைக்கற்று, இந்திவித்துவான்களாகத்தமிழ் நாட்டில் பணிபுரிகின்ருர்களே! தனி மனிதர்கள்! இவர்கள் தமிழை மறந்து இந்தியை வளர்க்க முற்பட்டதனுல், தமிழனுய் வாழ வேண்டிய வாழ்வு பாதிக்கப் பட்டுள்ளது.

4. தமிழன் உள்ளத்தில் தமிழ் தான் முதலிடம் பெற வேண்டும். இந்தி வித்துவான்களின் உள்ளத்தில் இந்திக்குத்தானே முதலிடம்! அங்கே தமிழ் மொழி மறைந்திருக்கிறதே!

5. "பிற மொழிகளைக் கற்பதனுல் தான் ஒருவனின் தாய் மொழி உலகப் புகழ்பெற முடியும்" என்ற கருத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். இதே வகையினுலும் தமிழால் ஆகிய திருக்குறள் இன்று உலகப்புகழ் கண்டுள்ளது என்பதை மறைக்க இயலாது. இந்தியிலும் அதுபோன்ற நூல்கள் தோன்றினுலோ தோன்றியிருந்தாலோ. உலகம் தானுகவிரும்பி ஏற்றுக்கொள்ளும், கட்டாயப் படுத்தி அல்ல!

(அடுத்த பக்கம் பார்க்க)

6 ஆம் பக்கத் தொடர்ச்சி ... ...

6, மொத்தத்தில் இந்தியால் நம் தமிழ் சிதைவுறுது; சிதைவுறக் கூடாது; வளரவேண்டும்; உரிய நிலையை அடையவேண்டும். ஆனால் இந்திக்கு இடங்கொடுத்து. தமிழ் பாதிக்கப்படாது என்று சொல்லிக் கொண்டிருந்தால், அது 'பூனையை மடியில் வைத்துக்கொண்டு சகுனம் பார்த்தகதைதான்!' என்பதே எமது மனச்சாட்சி.

7. வேண்டாத இந்தி மொழி விடயத்தில் இறங்கி, இந்தி - தமிழ் என்று பிரித்துப் பேசுவதால், தாய் மொழிப்பற்றுள்ளகட்சிகள் வளர்கின்றன. இதனுல் இந்திய தேயத்தின் பற்றிலிருந்து சிலரை வெளியேற்றுவதாக அமையவில்லை. 'இந்திதான் இந்தியாவை ஆளவேண்டும்' என்ற பற்றிலிருந்து வெளியேற்றுவதாக அமைகிறது என்பதைஉணர்கிறேம்.

கெல்லாம் உமது சொற்களிலே என்னய்யாபொருள்?போகட்டும்; அந்தத் தொடர்பு மொழிக்கு நம்மை இணைத்துவைக்கும் உயிரும் சதையுமாவது இருக்கிறதா? வந்துபாரும்.

அண்மையில் "காகாசாகீப் கலேல்கர்' என்ற அறிஞர் அரும்பாடுபட்டுக் 'கல்லூரி விரிவுரையாளர்', 'பேராசிரியர்' ஆகிய இரண்டுஆங்கிலச்சொற்கட்குப் 'பக்வாஷ்' 'மகாபக்வாஷ்' என்ற அரிய இந்திக் கலைச்சொற்களைக் கண்டுபிடித்திருக்கிறூர். இதற்குத் தமிழில் என்ன பொருள் தெரியுமா? ''உளறல்காரன்'' ''பெரிய உளறல்காரன்'' என்பதாகும் ஏன் அன்பரே! இந்த ''உளறல்'' மொழியைத்தானே இந்தியாவின் தொடர்பு மொழியாக ஒப்புக்கொள்ளச் சொல்கிறீர்? தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் இந்திமொழி பற்றிக் கூறுவதைச்சற்றே செவிமடுமின்.

வருமுன்னர்க் காவா தான் வாழ்க்கை
எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்.

— க. அ. செல்வன்

1. அழிவுக்கு உண்டான வேலைகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டுவிட்டன, நண்பரே. அரசியல் சட்டம் 17ஆவது பிரிவில். அதன் பயனை 65 சனவரி 26ஆம்நாள் முதல் இந்தி அரியணை ஏறுவதின் வழியாக நாம் அனுபவிக்கத்தான் போகிறேம். ''தமிழகம் ஏற்றுக்கொண்டால் தானே'' என்றெரு வினவை நீர் கேட்கத்துடிப்பது எனக்குப் புரிகிறது. ஆனுல் நிலைமைகள் நம்மைப் பயமுறுத்துகின்றன என்பதை இதோ பாரும்.

''தமிழ்நாட்டிலும் வங்காளத்திலும் இந்தியைக் கட்டாய பாடமாக்குவதே என் முதல் வேலை அதனை எவ்வகையிலும் செயல்படுத்தியே தீருவேன்'' கேட்டீரா அமைச்சர் சக்ளாவின் ஆணவ உரையை.

''இந்தி வெறியர்கள், உடனடியாகத் தென்னுட்டார் இந்தி கற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறுவது தவறு. அதற்குக் காலம் வேண்டும். மற்றமொழிகளைக் கற்றுக்கொள்வதில் திறமை மிக்கவர்கள் தென்னுட்டார். அவர்கள் இந்தியை எளிதில் கற்றுக்கொள்வார்கள்.'' பார்த்தீரா நண்பரே, தென்னுட்டாரின் முதுகைத் தடவும் வேலையை நடுவணரசின் பொதுநலத்துறையமைச்சர் திருமதி சுசீலா நய்யார் எவ்வளவுப் பக்குவமாகச் செய்கிறூர் என்று.

முன்னவர் 'திணித்தே தீருவேன்' என்கிறூர். பின்னவர் 'திறமைசாலிகள்' என்கிறூர் எதற்கு? தங்கச்சி மொழியான தமிழை உயர்த்தவா? இல்லைநண்பரே! குப்பைமேட்டுமொழியான இந்திக்கே கோபர வாழ்வு கொடுக்க! உணரும்.

2. என்ன சொல்கிறீர் தொடர்பு மொழியா? அப்படியானுல் ''ஆட்சி மொழி'' ''தேசிய மொழி'' என்பதற்

''தனக்கு எனச்சொந்த எழுத்து இல்லாத, பிற மொழி எழுத்துக்களைக் கொண்டே எழுதப்பட்டு வருகிற, சொந்த சொற்கள் இல்லாத, பிற மொழிச் சொற் கொண்டே பேசப்பட்டு வருகிற, இலக்கண மில்லாத, வடக்கே வடமொழியையும் தெற்கே தமிழையும் தழுவி இப்போது இலக்கணம் அமைக்கப்பட்டு வருகிற, பொன். பொது பொறு என்று எழுத முடியாத படிக்க முடியாத 'மொழி இந்தி' இந்த ஈன மொழியைத்தானே இந்தியாவை இணைத்து வைக்கும் மொழிஎன்கிறீர்? மன்னிக்க வேண்டும்,இதைவிட ஈனத்தனமான செயல் வேறென்றும் இருக்க முடியாது

2. சரியாகக் கேட்டீர். இதுநாள் வரை கண்ணை மூடிக்கொண்டா காலம்கடத்தினீ ?இரயில்வேதுறை, அஞ்சல் துறை இவற்றில் பணியாற்றும் நடு அரசுத்துறை ஊழியர்களைக் கேளும். தக்க பதில் கிடைக்கும்! ஏன்,சின்னுட்களுக்கு முன் ''இந்தித் தேர்வு தேவை இல்லை'' என்று கூறிய முதலமைச்சர் 'இந்தித்தேர்வு இருக்கும்; ஆனுல் கட்டாயமில்லை'' என்று மீண்டும் முருங்கை மரம்ஏறிய வேதாளனுமாரே. . அது கூடவா உமக்குத் தெரியவில்லை! படை முகாமிலிருந்து ஐ ஏ. எசு. தேர்வு வரை இந்திஇடம் பெற்று விட்டதை அண்மையில் வெளிவரும் செய்திகளின் வழியாக நீர் அறிந்து கொள்ள வில்லையா? ஓகோ . தனிமனிதர் பாதிக்கப்பட்டிருந்தால்தான் இதை நீர் ஒப்புக் கொள்வீர் இல்லையா? இதோ பாரும்; ஆந்திராவைச் சேர்ந்த பாராளுமன்றப்பெண் உறுப்பினர் யசோதா ரெட்டி, அழுது புலம்புவதை; ' என் கணவர் உயர் பதவியடையும் வாய்ப்பை இழந்து விட்டார் ;காரணம். அவருக்கு இந்தி மொழி தெரியாததேயாகும்'' புரிகிறதா தனி மனிதர் பாதிக்கப்பட்டது இவ்வளவுக்கும்மேலாக ' இந்தியக் குடியரசுத் தலைவர் இந்தியில்தான் உரைநிகழ்த்த வேண்டும்'' என்று பாராளுமன்றத்தில்நடந்ததே ஒரு நிகழ்ச்சி, அது போதுமே 'பாரதம்' களின் பித்து மனங்களுக்குச்சித்தத் தெளிவூட்ட!

4. முழுப்பைத்தியக்காரன் கூட இப்படியொரு கேள்வியைக் கேட்கமன் வந்திருக்கமாட்டான் ஆனுல் நீர் முந்திக் கொண்டு கேட்டிருக்கிறீர்! எனவே முன் எச்சரிக்கை என்னைப் போன்றவர்களுக்கு எப்போதுமே உண்டு இந்தி ஆட்சிமொழியானுல் தமிழும் பிறமொழிகளும் வாழுமா என்பதற்கு 7-3 54 தினமணிக்நதிஏட்டில் கே எம். முன்சி என்பவர் அபாய அறிவிப்புக் கொடுக்கிறூர் ஏடுகிடைத்தால்தேடிப்பாரும். ''ஆங்கிலம் எவ்வளவு விரைவில் நீக்கப்படுகிறதோ; அவ்வளவு விரைவில் இந்தி அந்த இடத்தில் நுழையத்துடிக்கிறது. (ஆங்கிலம் அகற்றப்படுமானுல் அந்த இடத்தைமற்றபதினுன்கு மொழிகளுமே அடைய வேண்டுமென்பதுதான் அறிஞர்களின் கருத்து) ஆங்கிலத்தை அகற்றும் கொள்கை ஏதோ மாபெரும் தேசத் தொண்டு என்று சாதாரணமாகப் படலாம். ஆனுல் இன்றைய தினம் நமக்குநிகழவிருக்கும மிகப் பெரிய இடர் வட்டார மொழி (இந்தி) வெறி ஒன்றுதான்

5. நண்பரே, பாரதியாரின் கவிதைத் தொகுப்பு உருசிய மொழியில் வெளியிடப்பட்டுள்ளது உமக்குத் தெரியுமா? பிறமொழிகளைக் கற்பதாலேயே ஒருவனுடைய தாய் மொழி உலகப் புகழ் அடைய முடியும் என்ற உமது கருத்துப்படி பார்த்தால், பாரதியார் என்ன உருசிய மொழியை கற்ரு இருந்தார்? இல்லையே! ஆக ஒருவனுடைய தாய் மொழி பிறமொழிகளைக் கற்பதால் மட்டுமே உலகப் புகழ் அடைந்து விடமுடியாது என்பதை இனியேனும் உணரும். ஒன்றை மனத்தில் பதிய வையும்: பிற மொழி கற்கும்வேகத்தில் தாய்மொழியைப் புறக்கணித்தவனுக்கு பாரதியிட்ட சாபம்,

வேறு வேறு பாசைகள் கற்பாய்—நீ
வீட்டுமொழி கற்கிலாய்
போ! போ! போ!

என்பது தான். கூந்தலின் சிக்கெடுக்கக் கொள்ளி கட்டையினையா நாடுவார்கள்? தமிழைச்சிறக்கவைக்க தரங்கெட்ட இந்தியையா துணைக்கழைப்பார்கள்? மடையன் கூட விரும்பமாட்டான் இதனை.

6, வருமுன்னர்க் காவா தான் வாழ்க்கை நண்பரின் மனச்சாட்சி அது எரிமுன்னர் வைத்தூறுபோலக் கெடும் என்பதே இவ்வெளியவன் கருத்து. அரசியல் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதினுன்குமொழிகளும் சமவாய்ப்பிற்கும் தகுதிக்கும் உரியவையே. ஆயின் இந்தி மட்டும் அனைத்திந்திய மொழி என்றுல்பிணக்குத்தானே? இது மாநில மொழி; அது அனைத்திந்திய மொழி என்று

(16ஆம் பக்கம் பார்க்க)

குறள்நெறி
தமிழ்வாழ்க

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்

தமிழ் வழியாகப் படித்தல்

கல்லூரிகளில் இன்று ஆங்கிலத்தின் வழியாகப் படித்துப் பட்டம்பெறும் முறையேயுள்ளது. அவரவர்மொழிவழியாகப்பயிலலே இயற்கையோடுஒத்ததும் எளிதும் ஆகும். உயர்நிலைப் பள்ளிச்கூடங்களில் ஆங்கிலத்தின் வழியாகப் படிக்கும் நிலை இருந்தது; அதனை மாற்றித் தமிழின் வழியாகப் படிக்குமாறு செய்து பல ஆண்டுகள் ஆய்விட்டன. அவ்வாறு கல்லூரிகளிலும் தமிழ் வழியாகவேப் படித்துப் பட்டம்பெறும் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டுவந்திருக்கவேண்டும். உயர்நிலைக் கல்விக் கூடங்களில் தமிழ் வழியாகப் படித்துவிட்டுக் கல்லூரிக்கு வந்தவுடன் ஆங்கிலத்தின் வழியாகப்படிக்கும் முறையால் மாணவர்கள் இடர்ப்பாடு அடைகின்றனர்.

மாணவர்கள் தமிழ் வழியாகப் படித்தலையே விரும்புகின்றனர். ஆசிரியர்களும் தமிழ்வழியாகக் கற்பித்தலே எளிதும் பயனுள்ளதும் ஆகும் என்று அறிந்துள்ளனர். ஆயினும் சில கல்லூரிகளில் சில பாடங்களைத் தமிழ் வழியாகப் படிக்க வசதியளித்திருந்தும் அவ் வகுப்புகளில் பேரளவில் சேர்ந்திலர். ஏன் சேர்ந்திலர்? தமிழ் வழியாகப் படித்தலை ஏன் விரும்பிலர்? பெருமைமிகு முதலமைச்சர் அவர்களே அதன் காரணத்தையும் கூறிவிட்டனர்.

"தங்களுடைய வருங்காலவாழ்ச்கையைக் கருதித் தமிழ்ப்பாடமொழிக் கல்லூரிகளில் சேர மாணவர்கள்தயங்குகின்றார்கள்போலும்." இவ்வாறுதான் முதல் அமைச்சர் அவர்கள் சட்டமன்றில் கூறியுள்ளார்கள். "**வாழ்க்கையைக் கருதிச் சேரவில்லை**" ஆம். தமிழ் வழியாகப் படித்தால் இன்றுள்ள சூழ்நிலையில் அரசுப்பதவிகள் கிட்டாது என்று கருதுகின்றனர். நடைமுறை அவ்வாறு கருதுமாறு செய்கின்றது. தமிழ்நாட்டு ஆட்சிமொழியாகத் தமிழை ஏற்றுக்கொண்டிருந்தும் தமிழ் வழியாகப் படித்தோரைத்தான் முதலில்பணிகளில் அமர்த்திக்கொள்ளவேண்டும் என்ற விதியை மேற்கொண்டிலர். ஆங்கிலத்தின் வழியாகப் படித்தோர்க்கே மதிப்பும் முதன்மையும் தருகின்றனராம். தமிழ் வழியாகப் படித்தோரை இகழ்ந்து ஒதுக்குகின்றனராம். இந்நிலையில் தம்மைத் தாழ்த்திக்கொண்டு எவர்தாம் தமிழ்வழியாகப் படிக்க முன்வருவர்!

"வேலை பெறும் நோக்கத்தைமட்டுமே மாணவர்கள் கொண்டிருக்கக்கூடாது" என்று முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள் இன்று எல்லாரும் வேலைபெறும் நோக்கத்துடன்தானே படிக்கின்றனர். அறிவு வளர்ச்சிக்கெனப் படிப்பார் யாரும் இலரே. ஆதலின் தமிழ் வழியாகப் படித்தால் அரசுப் பதவிகள் கிட்டாது என்று அஞ்சுதல் இயற்கைதானே. "தமிழைப் பாடமொழியாக எடுத்துக் கொண்டால் தங்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படுமோ" என்று அஞ்சும் மாணவர்களின் அச்சத்தைப்போக்கவேண்டியது அரசின் கடமையன்றோ? தமிழையாட்சி மொழியாகக்கொண்டுள்ள தமிழ் நாட்டு அரசு "தமிழ் வழியாகப் படித்துவருவோரையே பணிகளில் அமர்த்துவோம்" என்று கூறுவதற்குமாறாக "தமிழ்நாட்டு அரசுப்பதவிகளில் இடம் பெற விண்ணப்பம் செய்வோர் தமிழறிவு பெற்றிருக்கவேண்டியகட்டாயமின்று" என்று அன்றே அறிவித்துள்ளது! பிறகு எங்ஙனம் தமிழ்வழியாகப் படிக்க முன்வருவர்? ஆங்கிலேயர் ஆட்சி மறைந்தும் ஆங்கில மொழிச்செல்வாக்கும் மதிப்பும் இன்னும் மறைந்திலவே! ஆங்கிலப் புலமையும் பற்றும் உடையோர்தாம் ஆட்சிசெலுத்துகின்றனர்.

கல்லூரிகளில் தமிழ்ப்பாடமொழி வகுப்பில் மாணவர்கள் மிகுதியாகச் சேராமைக்குக் கல்லூரி முதல்வர்களும் காரணமாவார். ஆங்கிலத்தை மதித்துத் தமிழைத் தாழ்வாகக் கருதுவோரே இன்னும் கல்லூரி முதல்வர்களாக உள்ளனர். தமிழ் வழியாகப் படித்தலை உயர்வுபடுத்திக்கூறுவது கிடையாது. மாறாக இழிவுபடுத்திக்கூறுவோரும் உளர். கல்லூரியில் இடம் தேடிவருவோர் கல்லூரிமுதல்வர் விருப்பத்திற்கு ஏற்பவே நடப்பது இயல்புதானே. ஆகவே, தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர்களே முதல்வர்களாயிருப்பின் இவ்வவல நிலை எளிதில் நீங்கும். ஆனால் கல்லூரி யைநடத்துவோர்க்கும் 'ஆங்கிலமோகம்' இன்னும் அகன்றிலது. ஆகவே ஆங்கிலத்தின் வழியாகப் படித்தலையே மாணவர்கள் தம் விருப்பத்திற்கு மாறாக நாடுகின்றனர்.

தமிழ்ப்பாடமொழி வகுப்புக்களில் மாணவர்கள் மிகுதியாகச் சேரவேண்டுமென்றால்

1 தமிழ்வழியாகப் படித்து வருவோர்க்கே முதலிடம் என்று உடனே அறிவித்தல் வேண்டும்.

2 தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர்களே கல்லூரி முதல்வர்களாக இருத்தல்வேண்டும்.

அன்றியும் உயர் நிலைப் பள்ளிக்கூடங்களில் எல்லாவற்றிலும் ஒரே சமயத்தில் தமிழைப் பாடமொழியாக ஆக்கியதுபோல் கல்லூரிகள் அனைத்திலும் ஒரே சமயத்தில் தமிழைப் பாடமொழியாக ஆக்கிவிடல் வேண்டும். அங்ஙனமின்றி ஆங்கிலத்தின் வழியாகவும்படிக்கலாம் என்றுவைத்து அதன் வழியாகப் படித்துவருவோரே சிறந்தவர் என்று மதித்தால் தமிழ் வாயிலாகப் படிக்கவருவோர் அரியராகவே இருப்பர்.

ஆகவே, தமிழக அரசு தமிழைப் பாடமொழியாகஆக்குவதில் ஆர்வம்கொண்டிருப்பது உண்மையானால் இவைகளை எண்ணி ஆவன உடனே செய்யுமாறுவேண்டுகின்றோம். தமிழைப்பாடமொழியாகக்கற்றுவருவோரால்தான் தமிழ்நாட்டுக்குப் பெருநன்மை விளையும்.

தமிழக அரசைப் போற்றுகின்றோம்

ஆசிரியராகப் பணியாற்றும் தமிழ்ப்புலவர்கள் அனைவருமே ஆசிரியர் பயிற்சி பெறுதல்வேண்டுமெனத் தமிழகஅரசு ஆணை பிறப்பித்திருப்பதனை அறிந்து, ஐந்து ஆண்டு ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளோருக்கு விதிவிலக்களிக்கலாமென சென்ற இதழில் வேண்டியிருந்தோம். 1960 சூன் முதல் நாளுக்கு முன்னர் நியமனம் பெற்றோர் பணியில் தொடர்ந்திருக்கலாமென தமிழக அரசு ஆணை பிறப்பித்திருப்பதாக அறிகின்றோம். தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துப்போற்றுகின்றோம்.

★ **தமிழ்வழிக் கல்வியே**

சாதி ஒழிப்பும் கலப்புத் திருமணமும்

'சாதி' என்பதே தமிழ்ச் சொல்லன்று. 'சாதிகள்' அறியாத் தமிழ்நாட்டில் எவ்வாறோ 'சாதிகள்' தோன்றி நிலைத்துவிட்டன. சாதிகளை ஒழிப்பதற்கு அவ்வப்போது பெரியார்கள் தோன்றி அரும்பாடு பட்டுள்ளனர். ''பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்'' என்றார் தமிழ்மறை வகுத்த வள்ளுவர்பெருமான்.

'மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?
காற்றும் சிலரைக் கடிந்து வீசுமோ
மாநிலம் சுமக்கமாட்டேன் என்னுமோ
வாழ்நான்கு சாதிக்கு உணவு நாட்டி லும்
கீழ்நான்கு சாதிக்கு உணவு காட்டி லுமோ.''

''குலமும் ஒன்றே குடியும் ஒன்றே
வழிபடு தெய்வமும் ஒன்றே."

என்றெல்லாம் சாதிக் கொள்கையை வெறுத்துச் சமத்துவத்தை நிலைநாட்டப் பாடினர் கபிலர்.

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்று உண்மையறம் கூறினர் திருமூலர்.

''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்றார் தமிழ் நாட்டுத் தேசியப் பெரும்புலவர் பாரதியார்.

ஆயினும் இன்று காண்பது என்ன? 'சாதி வெறி' தலைதூக்கிக் களிநடம் புரிகின்றது. எங்கு நோக்கினும் எல்லாத்துறைகளிலும் சாதியை முதன்மையாகவைத்தே யாவும் நடைபெறுகின்றன. திறமையும் பண்பும் உழைப்பும் புறக்கணிக்கப்படுகின்றன.

சில ஆண்டுகட்கு முன்னர், சாதிகள் ஒழியும் நிலை உருவாகுவதுபோல் காணப்பட்டது. ஆனால் மக்களாட்சித் தேர்தல் வந்ததும், மறையும் நிலையில் இருந்த சாதிவெறி வன்மையுடன் புத்துயிர் பெற்றுவிட்டது. சாதிகளைக் காட்டியே தேர்தலில்வெற்றிபெற வேண்டிய நிலைமை வளர்ந்துவிட்டது. இந்நிலை நீடிக்குமானால் சமயவெறிபோல் சாதி வெறியும் கூடிவாழும்மக்களைப் போரிட்டுக்கொண்டுமடியுமாறு செய்யும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. நாட்டு நலத்தில் கருத்துடையோர் வாளாயிருத்தல் நன்றன்று.

சாதிகளை ஒழிப்பதற்கு வழியென்ன? 'கலப்பு மணம்'தான். 'கலப்பு மணம்' ஒன்றால்தான் சாதிகள் ஒழியும் ஆகவே தம் சாதிகளிலேயே திருமணம் செய்துகொள்வதைக்குற்றமாக்கும் சட்டம் கொண்டுவருதல் வேண்டும். இக்கருத்தைத் தமிழகச் சட்டமன்றில் வெளியிட்ட காரைக்குடி அறிஞர் சா கணேசன் அவர்களைப் பாராட்டுகின்றோம். இவ்வாறு சட்டம் செய்வது புதுமையும் அன்று. பிராமணர்களிடையே ''சகோத்திர'' திருமணம் கூடாது என்ற மரபு கைபாளப்படுகின்றதாம். அஃதாவது ஒரே கோத்திரத்திற்குள் திருமணம் செய்யக்கூடாது என்பதாகும். அதுபோல ''ஒரே சாதிக்குள் திருமணம் செய்யக்கூடாது'' என்று தடைச்சட்டம் கொண்டுவருதல் வேண்டும்.

''கலப்பு மணம்'' செய்துகொள்வோர்க்கும் அவர்கட்குப் பிறக்கும் குழந்தைகட்கும் அரசு உதவிகள் எளிதே கிடைக்க வழி செய்யவேண்டும். எவ்வகையினும் சாதிகளை ஒழிக்க முந்துறுதல் வேண்டும். சாதிகள் ஒழிந்தால்தான் மக்களாட்சி சிறப்புறும். இல்லையேல் சாதியாட்சிதான் நடைபெறும். சாதிப்பேய் ஆட்சி செயின் 'சமநிலைக் குடியரசு' ஒருநாளும் தோன்றாது.

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்''.

எனும் வள்ளுவர் வாய்மொழி பொய்த்து ஆட்சித் திறமை சீர்குன்றும். மக்கள் நலம் புறக்கணிக்கப்படும். குடியாட்சிசிறப்புறக்கொடுஞ்சாதிஒழித்தல் வேண்டும். கொடுஞ்சாதி ஒழித்தலே 'குறள்நெறி'யின் குறிக்கோளாகும்.

திருவள்ளுவர் ஒப்பற்ற அரசியல் தலைவர்.

''எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய விதிகளை வகுத்துள்ள ஒப்பற்ற அரசியல் அறிஞராவார் திருவள்ளுவர்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே சமநிலை வாழ்வியற்கொள்கைகளைக் கூறியுள்ள அவரினும் உயர்ந்த சமநிலைக்கொள்கையாளர் (Socialist) யாவருளர்?'' இவ்வாறு டாக்டர் சாகிர் உசேன் (23-2-64ல்) தமிழகச் சட்டமன்றில் திருவள்ளுவரின் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்தபோது முழங்கினர். ஆதலின் சட்டமன்ற உறுப்பினராக வருவோர் ஒவ்வொருவரும் திருக்குறளைத் தவறாது பயின்றிருக்கவேண்டும். திருக்குறளைக்கற்று அதன் வழி நடப்போரால் ஆளப்படும் நாடே உலக அரங்கின் முன்னணியில் நிற்றல் இயலும்.

குறள் வழி நிற்போம்; குடியரசு காப்போம்.

'குறள்நெறி'

இதழ் வளர்ச்சிக்கு நன்கொடை.

பரணிபாடியபுதுமைக் கவிஞர் கி. அரங்கசாமி (திருக்குறள் ஆட்சி மன்றம், இராசிபுரம்) உருபாய் 15 நன்கொடை அளித்துள்ளார்.

நன்கொடை அளித்த நற்றமிழ்ப்புலவர்க்கு எம் உளமார்ந்த நன்றி.

இதழ் வளர்ச்சி கருதி நன்கொடைகள் அன்புடன் வரவேற்கப்படுகின்றன — நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

— ஆசிரியர்

செந்தமிழ் காக்கத் தீயில் மூழ்கிய செம்மல் சின்னச்சாமியின் குடும்பத்திற்கு உருபாய் ஐந்து அனுப்பியுள்ளதாகத் திரு **வீ. வீரையா** (வீரசோழம் முகவை மாவட்டம்) அறிவித்துள்ளார். தமிழ் காக்க மாண்டோர்க்குத் தம் கடன் செலுத்திய அவர்க்கும் அவர் நண்பர்கட்கும் தமிழகத்தின் நன்றி என்றும் உரியதாகும்.

— ஆசிரியர்

தலைமைக்கு வழியாம் ★

(15—3—64 இதழின் தொடர்ச்சி)

மொழித்திற முட்டறுத்தல்

பெரும்புலவர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்

4. முதியோர் மொழி

எனினும் தமிழில் உள்ள நெருங்கிய உறவு முறைப் பெயர்களை ஆய்ந்தால் அவை அகரத்தில் தொடங்குவதன்றி, இதழ், பல், நுனிநா இவற்றின் முயற்சியால் உண்டானவை என்ற உண்மை புலனு கின்றது.

அம்மா, அப்பா, அத்தை, அம்மான், அன்னை, அண்ணன், அண்ணி, அம்பி, அத்தான், அத்தாச்சி, அண்ணாச்சி, அண்ணாத்தை, அத்திம்பேர், அம்மாஞ்சி, அம்மாச்சி, அப்பச்சி, அம்மாமி, அப்பாயி முதலிய சொற்களை நோக்குக.

இவ்வாறே பேச்சுக்கருவிகளின் எளிய இயற்கை முயற்சியால் வேறு பல சொற்களும் பிறந்துள் ளன. பேச்சுக் கருவிகளின் பெயர்களாகிய வாய், இதழ், பல், நா ஆகிய சொற்களையும் மூக்கு என்ற சொல்லையும் ஒலியியங்கும் முறைப்படி ஆய்ந்தால் இதன் உண்மை விளங்கும். 'வாய்' என்ற சொல் லின் வகரம் கீழிதழில் தோன்றுகிறது. 'இதழ்' என்ற சொல்லின் இகரம் இதழ் விரிதலால் உண்டா கிறது. 'பல்' என்ற சொல்லின் பகரம் இதழ்கள் இணைந்து திறப்பதால் உண்டாகிறது. லகரம் பல் லடியில் தோன்றுகிறது. 'நா' என்ற எழுத்து பல் மருங்கில் தோன்றுகிறது. மூக்கு என்ற சொல்லில் உள்ள மகரம் இதழ்கள் மூடித் திறக்கும்போதுண் டாகும் மூக்கு வளியால் உண்டாகிறது. நிலம், நீர், தீ, வளி, வான் என்ற சொற்களும் இவ்வாறே உண் டாகின்றன. வினைச் சொற்களில் 'வா', 'போ' ஆகி யசொற்களும் முதலில் தோன்றியிருக்கவேண்டும். அடியிதழை மடித்து வாயை அகலத் திறந்தால் 'வா' என்ற சொல் தோன்றுகிறது. ஈரிதழ்களையும் குவித்து வாயை அகலத் திறந்தால் 'போ' என்ற சொல் தோன்றுகிறது. இவ்வாறே தா, பார், நட, இரு, எழு, எடு, வை, ஓடு முதலிய வினைகளும், நான், நீ, அவன் ஆகியமூவிடப்பெயர்களும் தோன் றினவாகும். ஓரசைச் சொற்களாகிய வா, போ, தா, பார் முதலியவை ஏவல்வினைகளாதலால் அவை யே வாக்கியங்களாம். இன்னணம் சொற்கள், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் குறிப்பனவாகவும், இவற்றின் பல்வேறு செயல்க ளைக் குறிப்பனவாகவும், மக்கள் எண்ணங்களையும் மனவெழுச்சி, தளர்ச்சி முதலியனவற்றைக் குறிப் பனவாகவும் எழுந்து, திருந்தியபேச்சுமொழிதோன் றிய பின்னர் அச்சொற்களை வரையறைப்படுத்தி அழகுற அமைத்து, ஐந்திணை இயற்கைக் காட்சிக ளையும், பொருள்களையும் துணையாகக் கொண்டு அகப்பொருள் பாடல்களைப் பாடினர் நம் பண்டை மூதறிஞர். பின்னர், புறப்பொருள் பாடல்களைப் பாடினர். இவ்வாறு செய்யுள் பிறந்தது. இலக் கியம் தோன்றியது. பிறகு இலக்கியத்திற்கு இலக் கணம் தோன்றியது. அதன்பிறகு பேச்சுமொழி முன்னையினும் வளம் பெற்றது. உரைநடையும் தோன்றியது.

இயற்கை ஒலிச் சொற்கள் மாறுபடுதல்.

யாம் மேற்கூறியவாறு முதலிற்றோன்றிய சொற் கள் பேச்சுக் கருவிகளின் எளிய, இயற்கையான முயற்சிகளினாலுண்டானவை எனின், அவை எம் மொழியிலும் ஒன்றாயிருத்தல் வேண்டுமே என்ற கேள்வி பிறக்கின்றது. மக்கள் வெவ்வேறு வெப்ப தட்ப நிலையுள்ள நாடுகளில் வாழ்வதும், அவர்களு டைய பழக்கவழக்கங்கள், உணவு வகைகள் முத லியன மாறுபடுவதும் ஒலிவேறுபாட்டிற்குக் கார ணங்களாகும். எடுத்துக்காட்டாக இரண்டொரு கூறுதும். சீனமக்களின் சொற்களில் மூக்கின் வழி யே யாப்புறத் தோன்றுகிறது. அரபிச் சொற்க ளில் மூக்கு வளியும் மிடற்று வளியும் மிக்குள்ளன, ஆங்கில மொழியை இந்தியராகிய நாம் பேசுவதற் கும், ஆங்கிலேயரே பேசுவதற்குமுள்ள குரல்வேறு பாட்டை நோக்குக தமிழ்மொழியின் 'நான்' என்ற சொல் தமிழிலிருந்து பிரிந்த மலையாளத்தில் 'ஞான்' எனத் தோற்றமளிப்பதைக் காண்க. எனினும் ஆராய்ந்து பார்த்தால், அம்மா, அப்பா என்றசொற் களைப்போலவே பல மொழிச்சொற்கள் ஒன்றாயி ருத்தல் காணப்படும்.

மொழிநூலறிஞராகிய காலஞ்சென்ற புனிதர் ச. ஞானப்பிரகாசர் (O. M. I). தம்முடைய சொற் பிறப்பு ஒப்பியல் தமிழ்அகராதியின் முன்னுரையில் கீழ்வருமாறு கூறியிருக்கின்றார் :

"இந்திய ஐரோப்பிய (ஆரிய) மொழிகளும், தி ராவிட மொழிகளும் இவைகளுக்குமுன்பிருந்த ஓரி னமொழியிலிருந்து தோன்றியவை. இதனையறிவ தற்குத் தமிழ் மொழியே பேருதவி செய்தது. இந் திய ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொற்கள் (Roots) யாவையெனப்பிரித்தறிய முடியாதவாறு மாறுதலடைந்துவிட்டன. தமிழ் மொழியில் ஒரு சொல்லின் வேர் இதுவெனத் திட்டமாகச் சொல்ல லாம். தமிழ்ச்சொற்களின் இரண்டாந்தரவேர்களு டன் இந்திய ஐரோப்பிய மொழிச்சொற்களின்வேர் கள் என்று கருதப்படுகின்றவை பெரும்பாலும் ஒத்திருக்கின்றன".

இவ்வாறு புனிதர் ஞானப்பிரகாசர் கூறும் முதல் இனமொழி தமிழ்மொழியாகவேஇருக்கலாம். ஏனெனில், அவர் கூற்றின்படி தமிழ்ச் சொற்களின் வேர்கள்தாம் மாறாதனவாயுள்ளன. இரண்டாவ தாக, தமிழ் மொழியிலேயே எளியஇயற்கைச்சொற் கள் ஏனைய மொழிகளைவிட மிகுந்துள்ளன. மொ ழித்தோற்றம் பற்றிய ஆராய்ச்சியை இத்துடன் நிறுத்தி மொழி வகைகளைப்பற்றிச் சிறிதாராய்வாம்.

(தொடரும்)

வாழ்மின் புலவீர்காள்! வண்டமிழ் காக்க

இவர்கள் எந்த இனம்? (திருக்குறளார்)

வாழ்க்கையில் நண்பர்கள்-பகைவர்கள் என்று இரு பிரிவுகளைக் காணுகின்றோம். பகைவர்களைக் காணுகின்றபோது, கண்டுகொள்ளமுடியாத கொடியவர்கள், பகைவர்களாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களை நாம் கண்டுகொள்ளவும் முடிவதில்லை; புரிந்துகொள்ளவும் முடிவதில்லை; தெரிந்து கொள்ளவும் முடிவதில்லை. ஏன்? இவர்கள் நம்முடைய நெருங்கிய நண்பர்கள் போலவே பழகி வருகிறார்கள்! இவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்? இவர்களெல்லாம் தனிப்பட்டதொரு இனத்தைச் சேர்ந்தவர்கள்! நம்முடைய இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர்; இதுதிருவள்ளுவரின் வாக்கு; விளக்கம்.

இந்த இனத்தினர் யாருடன் பழகுகின்றனரோ அவருக்கு முடிவான தீங்கினை உண்டாக்குவதற்கே பழகுகின்றனர்; அப்படிப்பட்ட தீங்கினைச் செய்கின்ற காலம் வரும் வரையில் நண்பர்களாகவே இருப்பர்; இவர்களைக் கண்டுகொள்ளமுடியாதபடியால் இவர்களின் கொடிய திட்டத்திற்கு ஆளாகி ஆபத்திற்குள்ளாகி, துன்புறுகிறார்கள்; இந்த இனத்தினரை அறவே நீக்கி ஒழித்தால்தான் மக்கள் நலமாக வாழமுடியும். இந்த இனத்தினரைக், "கூடா நட்பு" என்ற பகுதியில் ஆசிரியர் தெளிவாக விளக்குகின்றார். 'கூடா நட்பு" என்பதற்குத் தெளிவான பொருள் கொடிய பகைவர்கள் என்பதேயாகும். மனத்தால்--எண்ணத்தால்—எவ்வித அன்பும் நட்பும் கொள்ளாமல் தீங்கு செய்வதற்காகவே-அக்காலம்—வாய்ப்பு வரும் வரை நண்பர்கள் போல பழகிக் கொண்டிருப்பவர்கள்.

'இனம் போன்று இனமல்லார்' என்ற தொடர் 'கூடா நட்பு' என்ற பகுதியில் வருகின்ற குறட்பா அடியின் முதற் பகுதியாகும். நம்முடைய இனத்தைச் சேர்ந்தவர்கள் போலத்தான் காட்சியளிப்பார்கள்; பேசுவார்கள்; பழகுவார்கள்; ஆனால் நிலைத்து நிற்கின்ற பகைமை எண்ணமே அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் இப்படிப்பட்ட இனத்தவர்களை நல்லவர்களாகச் செய்யமுடியாதா என்று கேட்டால், முடியாது என்று ஆசிரியர் குறிப்புத் தருகின்றார். "ஒரீஇவிடல்" என்றொரு குரல் இந்த அதிகாரத்தின் குறட்பாவில் ஒலிக்கிறது. அஃதாவது இவர்களை நம்மிடம் அணுகாதவாறு நீக்கிவிடுதலே தான் வழியாகும்.

இந்த இனத்தினரைக் குறித்துப் பேசுகின்ற மற்றொரு இடத்தில் 'மனத்தின் அமையாதவரை' என்று சொல்லுகின்றார். மனத்தில் எள்ளளவும் பொருத்தம் இல்லாத இனத்தார் என்றால் அவர்களைப் பிறவிப்பகைவர்கள் என்றுதானே கொள்ளுதல் வேண்டும்?

இந்த இனத்தினர் நம்முடன் பேசும்போது மிகமிகப்பணிவுடன் பேசுவார்கள்; நயமாகப்பேசுவார்கள்; அதிக வணக்கத்தினைக் காட்டுவார்கள்; எப்படி எப்படியாக வணங்கிப் பேசினாலும் நம்பாதே என்கின்றார் ஆசிரியர். அதிக வணக்கத்தினைக்காட்டினால் விரைவில் நமக்குத் தீங்கு செய்யவே இருக்கிறார்கள் என்பதாகும். ஏன்? இவர்கள்தான் 'கூடா நட்பு' இனத்தவர்களாயிற்றே! 'வில்' அதிகமாக வளைய வளைய அதிகமானதாகத் தீங்கினைச் செய்யும் என்கின்ற எடுத்துக்காட்டை இந்த இனத்தினரின் வணக்கத்திற்கு ஒப்பிடுகிறார் ஆசிரியர். சிந்திக்கவும்!

நாமே தேடிக்கொள்ளுகின்ற துன்பம் - என்கின்ற பேச்சினை நடைமுறையில் பலர் பேசுவதை நாம் கேட்காமலில்லை. அதற்குக் காரணம் கூடா நட்பினராகிய இந்த இனத்தினரைக் கண்டுகொண்டு நாம் ஒதுக்கித் தள்ளாததே யாகும்.

இந்த இனத்தினரின் முகத்தோற்றம் நன்றாகக் கூட இருக்குமாம்! அதாவது இனிமையான முகத்தினை நம்மிடம்காட்டுவார்களாம். புன்முறுவலுடன் நகைத்துப் பழகுவார்களாம். 'முகத்தின் இனிய நகா' என்ற சொற்களை ஆசிரியர் கூறுகிறார். அப்படிக் கூறிவிட்டு அதற்கு அடுத்து 'வஞ்சகர்கள்' என்று எடுத்துக் காட்டுகிறார். இந்தக்கூட்டத்தினரை நாம் வைத்துக்கொண்டிருக்கும்வரை நமக்கு வாழ்வேது? ஆசிரியர் வள்ளுவனார் இவர்களைப் பற்றிப் பேசுகின்ற ஒவ்வொரு சொல்லும் நம்மை நடுங்க வைக்கின்றது. ஏனென்றால், தனிப்பட்ட பகைவனைப்பற்றியதாக இருந்தாலும் நாம் அவ்வளவுக் கவலைப்படவேண்டியதில்லை. 'இனம்' என்று கூறி இப்படியாக ஒரு இனமே-கூட்டமேவாழ்கின்றதென்று குறிப்பிட்டால் நாம் எவ்வளவு தூரம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதனை உணரவேண்டும்.

'கும்பிடுதல்' 'தொழுதல்' என்று சொல்லுகிறோமே அதுவும் இந்த இனத்தாரிடையே இருக்குமாம்; இருகை கூப்பித் தொழுகின்றனர் என்று எண்ணி ஏமாறாதே. அந்த இருகைகளினுள் 'கத்தி' இருக்கும்; ஆம்; அந்த இனத்தார் அப்படித்தான் இருப்பார்கள்! 'தொழுத கையுள்ளும் பகை ஒடுங்கும்' என்று விளக்கம் தருகின்ற குறட்பாவும் இப்பகுதியான 'கூடாநட்பில்' தான் சொல்லப்படுகின்றது. 'தீநட்பு' என்றொரு பகுதி திருக்குறளில் உண்டு; அதற்குப் பொருள் தீய பழக்கவழக்கங்கள் உள்ளவர்கள் என்பதாகும். அவர்களுடன் பழகுவது ஒருவிதத்தில் நல்லதாகும்! ஏனென்றால். அத்தகைய தீய குணங்கள் உள்ளவர்களை நாம் மாற்றிவிடலாம்; தீநட்பினர் தமது தீய பழக்கங்களில் இருந்து காலத்தினால் மாறிவிடவும்கூடும். ஆனால் 'கூடாநட்பினர்' பிறவிப்பகைவர்கள்; நம்முடைய மக்கள் இனத்தவர்களே அல்லர்.

திருவள்ளுவர் அருளிய 'கூடாநட்பு'ப்பகுதியினை ஒவ்வொருவரும் ஊன்றிப் படித்து உணர்தல் வேண்டும்.

'அன்னை' காபியை
அருந்துங்கள்

திருக்குறளைக் கற்றலே தீந்தமிழ்க் காப்பாகும்

பாடல் அரங்கம்

தமிழ்ப் புரவலர் தங்கோவின் (சின்னச்சாமியின்) பேரிழப்புப்பா

— தூய தமிழ்க்காவலர் அண்ணல்தங்கோ

அ) நெஞ்சத் துணிவுடையாய்!-தமிழர்
நேர்மைத் திறமுடையாய்!
கொஞ்சும் தமிழ்வளம்பெற-தீயிலே
குளித்த தமிழ்மறவா!

ஆ) "அஞ்சி அடிமைகளாய்-வாழ்பவர்
அன்புமக்க ளாகார்!" என்றே
நெஞ்சுரம் காட்டிநின்றாய்!-சின்னப்பா!
நெருப்பிலே நின்றுவென்றாய்! (நெஞ்சத்)

இ) வஞ்சநெஞ்ச வடவர்!-திருந்ந
வாழ்வை நெருப்பில் இட்டாய்!
செஞ்சொல் தமிழ்மகனே!-சின்னப்பா!
திருக்குறட் கோமகனே! (நெஞ்சத்)

ஈ) நஞ்சையும் உண்பார்! என்றார்-நாவலர்
நட்பை வளர்ப்பவர்கள்!
நெஞ்சும் உயிரும் தந்தாய்!-தமிழ்த்தாய்
நிமிர்ந்து நடந்திடவே! (நெஞ்சத்)

உ) பஞ்செனத் தீயில் இட்டாய்!-உடலைப்
பைந்தமிழ் காத்திடவே!
அஞ்சாத் தமிழ் அரிமா!-சின்னப்பா!
ஆண்மகன் நீயே! அப்பா! (நெஞ்சத்)

ஊ) மஞ்சள் இழக்க வைத்தாய்!-உன்துணை
வாழ்வில் நெருப்பை வைத்தாய்!
பிஞ்சுமகள் செல்வி!-தமிழ்த்தாய்ப்
பெருமை அடைய வைத்தாய்! (நெஞ்சத்)

எ) பகைவர் உள்ளம் திருந்த-தமிழர்
பண்பை உணர்த்தி விட்டாய்!
நகைக்கத் தரும் மொழியாம்-இந்தியை
நாடே வெறுக்க வைத்தாய்! (நெஞ்சத்)

ஏ) தகைகை மிகும் வள்ளுவர்!-தமிழச்
சான்றோர் சொல் சான்றாண்மை!
மிகும் அறப்போர் புரிந்தாய்!-வாழ்விலே
மேன்மக னாகி நின்றாய்! (நெஞ்சத்)

ஐ) மொழி-இன-நில உரிமை!-இல்லாத
மொட்டை மர வாழ்க்கை!
பழியுடைத் தென்று கண்டாய்!-தமிழர்
பல்குழுத் தீமை கண்டாய்! (நெஞ்சத்)

ஒ) "அழிவேன்! தமிழர் ஒன்றி-வாழ்ந்திட
ஆக்க உணர் வளிப்பேன்!
மொழியில் உயர்ந்த தமிழ்!-ஓங்கநான்
மூழ்குவேன்! தீயில்!" என்றாய்! (நெஞ்சத்)

ஓ) தலை கொடுத்தான்! குமணன்!-தமிழ்த்தாய்
தனிச்சிறப் பெய்திடவே!
தலைவைத் தெரிந்து கொண்டே!-நந்தியும்
தண்டமிழ்த் தேனை யுண்டான்! (நெஞ்சத்)

ஔ) நிலையில்லா யாக்கையினால்-சின்னப்பா!
நிலையான ஆக்கம் தந்தாய்!
மலைமேல் விளக்கெனவே!-தமிழ்த்தாய்
வாழ ஒளி யளித்தாய்! (நெஞ்சத்)

செந்தமிழ்க் காதலன் சின்னச்சாமி

— திருச்செங்கோடு என். கே. பி. வேல்

1 செந்தமிழுக் குயிரீந்த சின்னச்சாமி!
தென்னகத்து வரலாற்றின் சின்னமாம் நீ!
வெந்தணலில் நொந்துயிரை இந்திக் காக
விட்டவனே! மொழிக்காதல் கற்றவன் நீ!
தந்தைதாய் மனைமக்கள் சொந்தம் நீத்தாய்!
தண்டமிழின் உயிர்ப்பண்பாம் மானம் காத்தாய்!
அந்தோநான் என்னென்பேன் அரிய தியாகம்
யாருனைப்போல் தாய்மொழிக்காச் செய்தா ரிங்கே?

2 தொடுத்தபுகழ்க் காஞ்சிமா நகரில் தோன்றித்
தொலலாண்மைத் திராவிடரின் சோர்வைப் போக்கி
அடுக்குமொழி மேடைகளில் அழகாய்ப் பேசி
அனைவருமே தமிழ்சுவைக்க எளிய தாக்கிக்
கொடுத்தபெரும் தமிழ்அறிஞர் அண்ணா இந்தி
குறித்தெடுத்த போராட்டக் களத்தில் உன்னைக்
கொடுத்துமுதற் களப்பலியாய் கொண்டாய் வெற்றி!
குலவுதமிழ்க் காவலனே! சின்னச் சாமி!

3 ஏடதிலே தமிழ்ப்பெருமை எழுதித் தீர்ப்பார்;
இணையில்லை தமிழிசைக்கே என்பர்; கூத்து;
நாடகங்கள்; திரைப்படங்கள்: மேடைப் பேச்சும்
நடத்திடுவார்; பொருள்சேர்ப்பார்; தமிழால் வாழ்
நாடறிய இந்திக்கே ஓர்போர் ஆட்டம் [வார்;
நடத்திடவே அரசதனை ஒடுக்கக் கண்டாய்
தேடரிய திருவிளக்கே சின்னச் சாமி!
தீக்குளித்தாய் செந்தமிழின் காதலாலே!

4 அன்றொருநாள் செந்தமிழின் சுவையில் மூழ்கி
அறம்பாடி வைத்தநந்திக் கலம்ப கத்தைச்
சென்றிடுநம் முயிரிதனை கேட்டா லென்றே
செப்பவுமச் செய்திக்கு அஞ்சா னாகி
வென்றிடுமத் தண்டமிழ்நூல் கேட்டே நல்ல
வீரச்சா வேந்திநின்ற பல்லவன் தான்
இன்றைக்குந் தமிழ்காக்க வந்தான் போலும்
என்னம்மோ யார்கண்டார் சின்னச் சாமி!

5 இன்றல்ல நேற்றல்ல பல்லாண் டாக
இனியதமிழ் மொழியழிக்கப் பல்லாற் றானும்
ஒன்றிவந்த வடமொழியால்; பிறர்பண் பாட்டால்;
உற்றதீ; அறியாமை; வெள்ளம் தன்னால்;
பொன்றாமல் மென்மேலும் பொலிந்து வாழும்
பொருவில்லாப் பைந்தமிழை இனிக்கும் பேச்சை
இன்றுவந்த இந்திமொழி கெடுக்க எண்ணும்
எண்ணத்தை உயிரீந்து கெடுத்து விட்டாய்!

6 பிற்காலச் சோழர்களின் பெருவாழ் விற்கு
பெற்றமகட் கொடையாகக் கொடுத்து வந்த
முற்கால மறவர்களின் குலங்கள் வாழ்ந்த
மூதாராம் கீழப்பழு வூரில் தோன்றித்
தற்காலம் தமிழர்களின் பெருவாழ் விற்கே;
தண்டமிழ்க்கே இடையூற்றை இந்தி செய்ய
முற்போர்க்கோ லங்கண்டாய் சின்னச் சாமி!
முத்தமிழ்க்கா வலனானாய் வாழ்க! மன்னா!

7 உன்னரிய தாய்மொழியின் தியாகங் கண்டு
உளம்நெகிழ்ந்த நடிகரெம்சி இராமச் சந்திரன்
பன்னரிய செயலென்றை யாயி ரத்தை
பண்புடனே சுப்ரமணியம் ஆயி ரத்தை
பொன்முடிப்பாய் அளித்துள்ளார்; மற்று முள்ளோர்
புகழ்கின்றார்; வியக்கின்றார்: போற்று கின்றார்;
மன்னியநின் திருவுருவை சிலையாய் நாட்டி
மறவாமல் வணங்கிடுவோம் சின்னச் சாமி!

கருத்து அரங்கம்

இந்தியால் தமிழுக்குக் கேடு.....?

விடைகள்

தமிழன்பர் திரு. லிங்கம் அவர்களுடைய கேள்விகளுக்கு விடை எழுதுமுன், நாம் பிறக்கும்போதே நம்மோடு பிறந்த தாய்மொழியான தமிழ், நம்மைப் பெற்ற தாய்போலும் தெய்வம் என்றும், நம் எண்ணங்களை உலகோருக்குத் தெரிவிக்க உறுதுணையாய் நின்று வாழவைக்கும் ஒப்பற்றதெய்வம் என்றும், இத்தகைய தாய்மொழியை வணங்கிக் காக்க மறப்பது தமிழ்மரபுக்கு ஒவ்வாதகொடுமை என்றும் கூறித் தொடங்குகிறேன் . . .

— விழியூர் இளவரசன்

செந்தமிழ்-வண்டமிழ் பைந்தமிழ்-...என்று எண்ணற்ற அடைமொழிகளால் அழைக்கப்பட்ட தமிழ் இன்று எவ்வாறுள்ளது? ஆரியம் தமிழோடு கலந்தபின் தமிழின் தனிச்சிறப்புகள் ஒழிந்ததுமட்டுமல்ல; தமிழ் மரபே குன்றிவிட்டது. 'இறைவழிபாடு' முதல் 'திருமணம்' வரையில்எத்தனையெத்தனை குறைகள்...எத்தனைக்கொடுமைகள்! இன்றைய தமிழர்களின் வாழ்க்கையில் தமிழ்நெறி முழுமையாகஇருக்கிறதா? இல்லையே .. ஆங்கிலம் நாடாளப் புகுந்தபின் தமிழுக்கு மேலும் சோதனை! தமிழ்-தமிழ்நெஞ்சங்களின் மூலையில் ஒதுக்கப்பட்டுத் தாழ்ந்தது ஆட்சி மொழி எல்லா இடத்திலும் பரவி வெற்றிபெற்றது; தாய்த் தமிழ் அவலநிலையில் குற்றுயிராகச் சிதைந்தது.

கொள்ளவேண்டும்' - என்பார்கள்- இது முழுப்பொய்! "பெரும்பான்மையான மக்கள் பேசுகிறார்கள்" - என்ற ஒரு சிறப்புக்கூட இந்திக்கு இல்லையே 2 விழுக்காடு கரிபோலி இந்தி பேசுகின்றவர்களின் எண்ணிக்கையோடு கோசலி-மைதிலி-போசுபூரி- ராசத்தானி ஆகிய நான்கு மொழிகள் பேசுகின்றவர்களின் எண்ணிக்கையும் கூட்டி, இந்தியாவில் 48 விழுக்காடு இந்தி பேசுவதாக கணக்கிட்டுள்ளது முழுச்சதியாகும். கரிபோலி இந்தியின் கிளை மொழிகள் அல்ல, பிற நான்கு மொழிகளும்; அவை வெவ்வேறு தனி மொழிகள். இந்தப் பெருந்தவற்றினை அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்டியவர்கள் எத்தனை பேர்! ஆயினும் தவறை உணரவில்லை அரசாங்கம்; ஒரு சிலரின் இந்திவெறிக்குப்பணிந்து தவறிழைப்பது மாநிலங்கள் அனைத்தும் ஒரு குடும்பமாக வாழத் தொடர்புகொள்ளவா?

1. இந்தியால் தமிழ் எந்தவகையில் அழிந்தது? அழிகிறது? அழியும்?

வீட்டுக் கூரையின் ஓர் மூலையில் தீப்பற்றினால், 'மூலையில்தானே பற்றிக்கொண்டிருக்கிறது' என்றுநினைப்பது அறிவுடைமை அன்று. இனிமேல் எங்கெல்லாம் பரவும், பரவி அழிக்கும் என்று நினைப்பதே நல்லறிவாகும். இந்தி இந்தியாவின் அலுவல் மொழி (official language எனப் பகுத்தப்பட்டபின், அலுவல் மொழி நாடு முழுவதுமே சூழும் என்றறிய வேண்டும். ஓர் மொழி நாடாளும் மொழியாகிவிட்டால், அந் நாட்டில் எத்துணைச் சிறந்த மொழிகள் இருப்பினும், முதலிடம் பெறுவது ஆளும் மொழியே.

இந்தி ஆட்சி மொழியானதால், தமிழ்நாட்டை வாழவைக்கக் கடமைப்பட்டுள்ள ஆளுநர்கள், நாட்டை மறந்து தம்மை வாழவைத்துக் கொள்ள தமிழைமறந்திருப்பது எல்லாவகை அழிவிலும் பேரழிவாகும். இந்தியைக் கற்றால்தான் 'உயர்பதவியுண்டு, வாழ்க்கையில்வெற்றியுண்டு' என்ற எண்ணத்தை ஊட்டிவிட்டிருக்கிறது ஆட்சிமொழியான இந்தி. இதனால், தமிழுள்ளங்கள் வேறுவழியில்லையே' என்றவேதனையோடுஇந்தி கற்குகவேண்டிய நிலையில் இருக்கின்றன. தமிழைப் படிப்பதால் வாழ்க்கையில் எவ்வகை வெற்றியும் கொள்ள அரசாங்கத்தில் வாய்ப்பில்லை என்றநிலையில் தமிழ் - தமிழுள்ளங்களில்- இரண்டாவது இடத்திலே தள்ளப்படுகிறது, இந்திமுதலிடம்பெறுகிறது; இந்தியால தமிழ் இவ்வாறு அழிகிறது

வரும் மொழியால்-வாழும் மொழி சிதைவது மட்டுமல்ல; இருக்கின்ற நல்லமரபுகளும் சிதையும்; வேண்டாதபுதுமரபுகள்; மக்களின் வாழ்க்கையை மாசுபடுத்தும்.

திருக்குறள் இருக்கவேண்டிய இடங்களில் மதநூல்கள் இடம்பெற்றன; அன்புஒன்றேஇருக்கவேண்டிய இடத்தில் சாதியும் மதமும்புகுந்தன. தமிழன் சூடத் தகுந்த தமிழ்ப்பெயர்கள், ஜெகநாதன்', 'சேஷாத்திரி', 'புஷ்பா', என்று கொலையுண்டமை எதைக் காட்டுகிறது? பிறமொழிக் கலப்பால். தமிழ் மொழியின் வளர்ச்சியையா? இல்லையே! செந்தமிழின் அழிவைத்தானே உணர்த்துகிறது...

இந்தியால் நாளைய தமிழ் மொழியின் நிலையை எண்ணினால் நேர்மையுள்ள மனிதர்கள் வீணே அமைதி கொள்ளார். இருவர் உரையாடுவதை எடுத்துக்காட்டாகப் பார்த்தால், நன்கு விளங்கும். கற்ற இருவர் பேசும்போது. அவர்களின்பேச்சில் அதிகம் கலந்துள்ள சொற்கள் ஆங்கிலமும்-வடமொழியும்தானே ஏதோ. ஓரிரு தமிழ்ச் சொற்களே இடையிடையே ஒலிக்கின்றன இன்று இவ்வாறாயின் நாளை நாடெங்கும் நிலவப் போகும் இந்தியும், உரையாடலில் கலந்து. எழுத்தில் கலந்து, மேலும் தமிழை ஒழிக்காதா? முடிவாகக்கூறிமிடத்து. இந்தியால் தமிழ் அழியுமா? போன்ற ஐயவினாக்கள் தமிழர்களுக்குத் தேவையற்றன. தீயால் மலர் வடுமா என்பது போன்ற பொருளற்றதும்கூட.

மக்கள் எண்ணிக்கையை விட்டுவிட்டுப் பார்த்தாலும் இந்திக்கு வேறுஎந்தத்தகுதியும் இருப்பதாகத் தெரியவில்லை. 1850ம் ஆண்டுக்குப் பிறகுதான் இந்தியே தலைதூக்கிற்று. சொற்பெருக்கில்லை-இலக்கணமில்லை-இலக்கியம் இல்லை-இனிமை இல்லை; இந்த மொழி மாநிலத் தொடர்புக்கு எதற்கு? எல்லாச்சிறப்பும்கொண்டு உலகம் தோன்றியபோது இயற்கை படைத்த தமிழ், இன்றும் இனிமைபோடு எண்ணற்றசிறப்புகள்கொண்டு வாழ்கிறதே! ஏன் தமிழையே ஆட்சிமொழியாக ஏற்கக்கூடாது? சற்றே நினைத்துப் பாருங்கள் . .

3. தமிழ்நாட்டில் இதுவரைஎந்தெந்த இடங்களில் இந்தி புகுந்துள்ளது? அதனால் தனிமனிதவாழ்வு யாருக்காவதுபாதிக்கப்பட்டுள்ளதா?

தமிழ்நாட்டில் இதுவரை எங்கெல்லாம் இந்தி புகுந்துள்ளது என்று தேடவேண்டிய கட்டாயம் இல்லை. அலுவல் மொழியான இந்தி, நாடு

2. நம் நாட்டிலுள்ள மாநிலங்களின் தொடர்பிற்கு உரியமொழி இந்தி என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

'இந்தியே உரியமொழி' என்று எவ்வாறு ஒப்புக்கொள்வது?—என அரசினரைக் கேட்டால், 'இந்தியை இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் பேசுகிறார்கள்; அதனால் இந்தியே கட்டாய அலுவல் மொழியாகக் கொண்டு மாநிலங்கள் தொடர்பு

முழுவதும் புகும்; புகுந்தும்வருகிறது இதுவே ஆட்சி மொழிக்குரியஆற்றல் ஒன்று இரண்டு என்று இந்தி நுழையும் இடங்களை எண்ணுவதைவிட, நாடு அனைத்திலுமே இந்தி இடம் பெறும்; பெற்றும் வருகிறது என்று அறிதல் நன்று.

3ஆம் பக்கத் தொடர்ச்சி ... ...

'இந்தி-தமிழ்' போராட்டம் தனி மனிதனின்வாழ்வுப்போராட்டமன்று தமிழ்மொழியை வாழவைக்கும் போராட்டம்; தமிழன் மானத்தைக் காப்பாற்றும் தன்மானப் போராட்டம். இந்தியால் - ஒரு தனி மனிதனின் வாழ்க்கை பாதிக்கப்படுவதை எண்ணுவதைவிட, தமிழ்ச்சமூகம் பாதிக்கப்படுவதைச் சிந்திப்பதே சிறந்ததாகும் இந்தி மொழியால், தமிழும், தமிழனும் பாதிக்கப்படுவதால். இச்சமூகத்திற்குரிய ஒவ்வொரு தனிமனிதனும் பாதிக்கப்படுவதை உணர வேண்டும் தனிமனிதர்களின் கூட்டமைப்புதானே, சமூகம்; சமூகமே பாதிக்கப்படும்போது தனி மனிதனைக் கணக்கெடுக்க வேண்டுமா என்ன?

4. இந்திமொழியால் எங்காவது ஓர் இடத்தில் தமிழ்மொழி மறைந்திருக்கிறதா?

ஆங்கிலம் இருக்கும் இடத்தில் தமிழ் இருக்கவேண்டும்; அயல் மொழியான ஆங்கிலத்தை விரட்டிவிட்டு, நாட்டு மொழியான தமிழைஆங்கிலம் இருக்கும் இடத்தில் வைக்கவேண்டும்; இதுதான் முறை. ஆனால், ஆங்கிலத்தை அயல்மொழியென்று விரட்டிவிட்டு, மற்றொரு அயல் மொழியானஇந்தியை வைப்பது இன்றைய ஆட்சி முறையில் காண்பது. இதனால், இந்தியால்-தமிழ் ஓர் இடத்தில் மட்டுமா மறைகிறது? மறையப்போகிறது?

ஆங்கிலம் இடம் பெற்றுள்ள எல்லா இடங்களுமே தமிழுக்குரியது: இந்த உரிமையை இந்தி பறிக்கவருகிறது; பறித்தும் கொண்டது. என். சி. சி. மாணவ மாணவிகளின், பாபே தேக் . தைனேகும் .. சாவ்-தான்.. சல்யூட் கரே முதலிய குரல்களே தங்கள் கேள்விக்குப் பதிலாக அமைந்துள்ளதே. இதுபோல் எத்தனையோ இடங்களை இந்தி பிடித்துள்ளது.

பொய்யாமொழியாரின் இலக்கணப்படி நடுநிலைமையில் நின்று நோக்குவோம். நோக்கினல் - செந்தணல் சூழ்ந்தால் தாமரை வாடாதென்று கூறஇயலுமா? கொடிய நஞ்சு உண்டால் உயிர்போகாது என்பது நீதியாகுமா? இப்படிப் பொய்யுரைக்க நல்ல மனம் கொண்டோர்கள்முன்வருவார்களா? வந்தாலும், அப்படி வருகின்றவர்களின் மனம்' எப்படி நல்ல மனமாக-நீதியை நினைக்கக்கூடியதாக இருக்கமுடியும்?

ஆரியத்தின் வரவால் இனிமை குன்றி—ஆங்கிலத்தின்ஆட்சியால் உரிமையற்று உருக்குலைந்த கன்னித் தமிழ், 'அரசாளவரும் இந்தியால் எந்நிலைமை அடையுமோ?' என்றல்லவா மானமுள்ள தமிழ்நெஞ்சங்கள் துடித்தழுகின்றன. கட்டாய ஆட்சிமொழி இந்தியால் தமிழ் கிஞ்சித்தும் சிதைவுறாது என்பது. மலையை மேகத்தால் மறைப்பது போன்ற பொய்யாகும். புரையோடிய புண்ணுக்குப் புனுகு பூசினல் குணமாகும் என்பது, எமது மனச்சாட்சிக்கு ஒவ்வாதது.

5. பிறமொழிகளைக் கற்பதால்தான் ஒருவனின் தாய்மொழி உலகப்புகழ் பெறமுடியும் என்ற கருத்தை ஒப்புக்கொள்கிறீர்களா? இந்த வகையில்தான் தமிழால் ஆகியிருக்கிறன் இன்று உலகப்புகழ் கண்டுள்ளது என்பதை மறைக்க இயலுமா?

பிறமொழிகளைக் கற்பதால், நம் தாய் மொழியும், தெய்வத் திருக்குறளும் உலகப்புகழ் கண்டுள்ளது இனியும் காணும்என்பதை, ஒருவாறு ஒப்புக்கொள்கிறேன் ஆனல் அந்தப்பிறமொழிகள்' எப்படிப்பட்டவைகளாய் இருத்தல்வேண்டும் என்பதே சிந்தனைக்குரியது அண்ணல் காந்தியாரின் உலகப்புகழுக்குக் காரணமாய் அமைந்தவன் கோட்சே என்று எந்த குறைமதியுடையோனும் கூறுவானே? இதுபோல், தெய்வத் தமிழ்மொழியின் உலகப்புகழுக்கும், வள்ளுவப்பெருமானின்ஒப்பிலாத்தெய்வமறையின் வான்புகழுக்கும் காரணமாய்அமைந்தது-அமையும் தகுதியுள்ள மொழி இந்தியா? தயவுசெய்து இதனைச் சிந்தித்துப் பாருங்கள். உலகனைத்தும் போற்றி வரவேற்கும் சிறப்புடைய மொழியா இந்தி? ஐந்துவகையான இந்தி பேசும் மக்களே, ஒருவர் பேசுவதை மற்றவர் புரிந்துகொள்ள முடியாத நிலையில் உள்ளபோது, இந்திமொழி கற்பதால் செந்தமிழோ—திருக்குறள்போன்ற சிறந்த தமிழ் நூல்களோ உலகப்புகழ் எய்துமா? உலக நாடுகள் அனைத்துக்கும் பாலமாய் அமைந்துள்ள ஆற்றல்மிக்கஆங்கிலமாய இந்தியைத் தாங்கள் நினைத்துள்ளது. வேதனைக்குரியதாகும். இந்தியின் உதவியால் தமிழ் உலகப்புகழ் கொள்ளுவது ஒருபோதும் இயலாதென்பது எமது உறுதியான முடிபு.

6. மொத்தத்தில் இந்தியால் நம் தமிழ் கிஞ்சித்துஞ் சிதைவுறாது என்று பசுமரத்தாணிபோல என் மனதில் பதிகிறது! இதில் உங்கள் மனச்சாட்சி என்ன?

சமன்செய்து..................
கோடாமை சான்றோர்க் கணி. —
குறள் 118

7. இறுதியாகந் தாங்களும் இன்னும் சிலரும் வேண்டாத இந்த மொழி விடயந்தில் இறங்கி இந்தி-தமிழ் எனப் பிரித்துப்பேசுவதால் அது ஒரு சிலகட்சிகளுக்கு வளர்ச்சியாகவும் நம் இந்தியதேசத்தின் பற்றிலிருந்து ஒரு சிலரை வெளியேற்றுவதாகவும் அமைகிறது என்பதை உணருகிறீர்களா?

தமிழன்பரே! இந்தக் கேள்வியைக் கேட்க. தங்கள் நன்மனத்துக்கு எப்படித்துணிவு வந்தது என்று வியக்கிறேன்: பெரும் வேதனையும் கொள்ளுகிறேன். பெற்ற தாயினும் மேலான தாய்மொழியைக் காப்பாற்ற முற்படுவது குற்றமென்று கூறுமல் கூறுகின்றீர்களே தாயைத் தெய்வமௌ வணங்கும் தமிழ் மரபு இதுதானு? தாயைக் காப்பது தீதென்று குற்றஞ் சாட்டுவது இந்நாட்டு மரபு இல்லையே! இந்த முடிவுக்கு எப்படி வந்தீர்கள்?

'தாங்களும் இன்னும் சிலரும் வேண்டாத இந்தமொழிவிடயத்தில் இறங்கி' .. என்று குறைகூறுகின்றீர்கள். வேண்டாத இந்தமொழி விடயத்தை வேண்டிய விடயமாக்கியது யார்? பேராசிரிய நம் இன்னும் சிலருமா? தயவுசெய்து எண்ணிப் பாருங்கள். இந்தி தமிழ் என்று பிரித்துப்பேசுவது கூடாதுதான். ஆனல் இப்படியொரு பிரித்துப்பேசும் நிலைமையை உருவாக்கியது அரசாங்கம் அல்லவா? தமிழ்-இந்தி என்பதால் ஒரு சில கட்சிகளுக்கு வளர்ச்சியாகும் என்கிறீர்களே, அந்தக் கட்சி யாது? தாய் மொழிக்கும் தாய்நாட்டு உரிமைக்கும் உழைப்பதற்காகத்தானே அந்தக்கட்சி இருத்தல் வேண்டும்; மொழியும், நாடும் சிறப்புற உழைக்கும் கட்சிகள் வீழ்ந்து, மொழியையும்—தாய்நாட்டையும் மறந்து, மானத்தை விற்று. பதவிவெறியில் இழிந்தவர்களின் வெறிக்குப்பணிந்து தந் நலத்தோடு இயங்கும் கட்சிகள் ஓங்கவேண்டும்என்கின்றீர்களா? ஓங்குவதாயின் மொழி வளம் பெறுமா? நாடுசிறப்புறுமா? தயவுசெய்து எண்ணிப் பாருங்கள்.

இந்த மொழி விடயத்தால் நம் இந்திய தேசத்தின் பற்றிலிருந்து ஒரு சிலரைவெளியேற்றுவதாகவும் அமைகிறது-என்ற பேருண்மையைக் கூறியுள்ளீர்கள்; மகிழ்ச்சியடைகிறேன். ஆனல் இப்படியெல்லாம் இந்திய ஒற்றுமையைச்சிதறடிப்பதுயார் என்பதே சிந்தனைக்குரியதாகும்.

இந்தியாவில் 14 மொழிகள் நாட்டு மொழிகளாக ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகும், இந்திஒன்றே கட்டாய அலுவல்மொழி (Official Language) யாகக்கொண்டது இந்திமொழிக்குள்ள தனிச்சிறப்புகளாலா? 2 விழுக்காடு மக்கள் பேசுகின்ற கரிபோலி இந்தியைக்கோசலி-மைதிலி- ராசத்தானி-போச்பூரி ஆகிய தனி மொழிகளோடு கூட்டி மக்கள் தொகையை அதிகமாக்கி மற்ற மொழிகளினின்றும் உயர்த்திக் காட்டும் முழுப்பொய், பிறமொழிகளை மதிப்பதாகுமா? இப்படியொரு துணிந்த சதி, நாட்டுஒற்றுமையை வளர்க்குமா? 14 மொழிக்குரியவர்களும் பாராளுமன்றத்தில் கூடியிருக்கும்போது, ஆங்கிலத்தில் உரையாற்றினல் கலகம் செய்வதும், இந்தியில்-தலைவர் உரை நிகழ்த்தி மற்றமொழிக்காரர்களைச்செவிடர்களாக்கி அவமானப்படுத்தும் 'இந்திவெறி' இந்தியா ஒரு குடும்பமாக வாழவேண்டும் என்ற நோக்கத்தோடா? தில்லி அரசாங்கத்தில் பணி செய்யவேண்டுமானல் இந்தியைக்கற்றேஆகவேண்டும்

(அடுத்த பக்கம் பார்க்க)

(15-3-64 இதழின் தொடர்ச்சி)

பூங்கோதை

தொடர் கதை

வித்துவான் மு. இராமகிருட்டிணன், எம். ஏ., பி. டி.

செங்கமலத் தம்மையார் என்ருவது இடை குறுக்கே அவ்வறைக்குள் பாதுகாப்போடு வைக்கப்பட்டிருந்த ஒரு நிலைப்பேழையின் உள்ளத்தைத் திறந்து அதனுள் வைக்கப்பட்டிருந்த அணிகள் முதலாய விலைபெறு பண்டங்களைச் சரி பார்த்து விட்டுப் போவார்.

செங்கமலத்தம்மையாரின் கணவர் சிவக்கொழுந்து அம்மையாரிடமிருந்து விடை பெற்றுச் சென்று ஆண்டுகள் ஒன்பது கடந்து விட்டன. இதே அறையில் தான் அவர் உயிர் நீத்தது. அவரை அடக்கம் செய்வதற்கு வெள்ளாடை போர்த்து தூக்கிச் சென்ற போது கண்ட அவருடைய வெளிறிய முகம் மீண்டும் பூங்கோதையின் நினைவிற்கு வந்தது. அச்சம் மீதூர, பூங்கோதை அலறிக் கொண்டு வெளியே ஓடுவதற்கு எழுந்து வாயிலை நோக்கி ஓடினுள். அப்பொழுதுதான் அவளுக்குத் தெரியவந்தது, தன்னை அவர்கள் ஒரு கொடிய சிறையிலே. அடைத்து விட்டனர் என்று.

இது என்ன அநீதி!

அஞ்சிக் கண்களை மூடினுள். அந்த உருவம் மறையவில்லை. மீண்டும் அது தன்னை நோக்கிவருவதுபோல் தெரிந்தது. அதே நேரத்தில் கதவிடுக்கிலிருந்து விளக்கொளியின் கதிர் அசைவதுபோலும் தெரிந்தது; சிறிது நேரத்தில் அவளுடைய நெஞ்சு விரைவாகத் துடித்தது; மூச்சுத் திணறி உயிரே போய்விடும் போலிருந்தது. அதற்குமேல் அவளால் தாங்கமுடியவில்லை.

ஐயோ அம்மா! என்று அலறிக் கொண்டு கதவை நோக்கி ஓடிவந்து கதவில் மோதித் தாழ்ப்பாளைக் குலுக்கினுள்.

மாடிப் படியில் ஏதோ ஆள் நடமாடும் ஓசை கேட்டது; கதவு திறக்கப்பட்டது.

'என்ன ஏதாவது கனவு கண்டாயா? என்று வினவினுள் காளியம்மை.

'அம்மா! என்ன அலறல்! காதே இடியெடுத்து விட்டது,' என்று ஓலமிட்டாள் கண்ணம்மாள்.

என்னை வெளியே போக விடுங்கள் அடுப்படியிலாவது போய்ப் படுத்துக் கொள்கிறேன்,' என்று பூங்கோதை அழுதாள்.

'ஏன் என்ன ஆயிற்று; எதையாவது பார்த்தாயா?' என்ருள் காளி.

'ஆம், முதலில் ஓர் உருவம் அசைந்து வந்தது; பிறகு ஒரு வெளிச்சம், தெரிந்தது; அதனுல் தான் அலறினேன், என்று காளியம்மையின் கையை இறுகப் பிடித்துக் கொண்டாள். அவளுடைய உள்ளத்திலும் ஒரு சிறிது இரக்கம் சுரந்தது அவள் பூங்கோதையை உதறித்தள்ளாமல் அணைத்துக் கொண்டாள்.

கண்ணம்மாவுக்கு மட்டும் இன்னும் பூங்கோதையினிடத்தில் அருவருப்புத்தான். 'வேண்டுமென்றே இவள் இவ்வாறு அலறியிருக்கிருள். அப்பொழுது தான் நாம் ஓடி வந்து இவளைத் திறந்து விடுவோம் என்ற சூழ்ச்சி' என்ருள் கண்ணம்மா.

அதற்குள் மற்றுமொரு குரல் அங்கு அதட்டலோடு கேட்டது. 'இது என்ன கூக்குரல். இந்தக்குட்டிப் பிசாசை இந்த அறையிலேயே பூட்டி வைக்கச்சொல்லியிருந்தேனே! யார் திறந்து விட்டார்கள்?' என்று செங்கமலத்தம்மையார் சினந்து கொண்டார்கள்.

'மிகவும் அஞ்சி அலறியது அம்மா, அதனுல் தான் திறந்து விட்டோம்'

'சரி தொலையட்டும் காளியம்மையின் கையை விடு. இந்த மாயமெல்லாம் என்னிடம் செல்லாது. இனி இந்த வீட்டிலே நீ இருப்பதனுல் உன்னுடைய அடங்காப்பிடாரித்தனத்தை யெல்லாம் விட்டு விடு.'

'அத்தை, எனக்கு என்ன ஒறுத்தல் வேண்டுமானுலும் கொடுங்கள் இந்த அறையிலே மட்டும் என்னைப் பூட்டி விடாதீர்கள்' என்று கல்லும் கரையும் படியாகக் கூறினுள் பூங்கோதை. ஆனுல் செங்கமலத்தின் உள்ளம் கல்லினும் கூடியது போலும்.

'போடி மாயக் கள்ளி! எதிர்த்தா பேசுகிருய்?' என்று மீண்டும் பூங்கோதையைஅவ்வறையினுள் தள்ளிக் கதவை இழுத்துப் பூட்டி விட்டு விரைவாகக் கீழே போய் விட்டாள். காளியம்மைக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பேசாமல் அவளும் பின் தொடர்ந்தாள் கண்ணம்மாவும் உடன் போய் விட்டாள்.

உள்ளே தள்ளப்பட்ட பூங்கோதைக்கு விழுந்த அதிர்ச்சியில் மயக்கம் வந்து விட்டது கால் கைகளெல்லாம் உதறின; மயக்கத்தைத் தொடர்ந்த உறக்கம் அவளுக்கு அமைதி அளித்தது.

இயல்-4

ஓரளவு மயக்கம் தெளியப் பெற்ற பூங்கோதைக்குத்தான் கண்ட வெருவெருக்கத் தக்க கனவுகள்நினைவிற்கு வந்தன. இரும்புக்கம்பிகளுக்கிடையே அழல் எழுந்துஎரிந்துகொண்டிருப்பது போல் அவளுடைய கண்களுக்குத் தென்பட்டது. சிலருடைய பேச்சு கிணற்றுக்குள்பேசுவது போல் கேட்டது. அவளை யாரோ அணையோடு சேர்த்து உட்கார வைப்பது தெரிந்தது. தான் அன்று வரை துய்க்கப் பெருத ஒரு மென்மைத் தன்மையோடு நடத்தப்படுவதையும் உணர்ந்தாள்.

சில விஞடிகளில் ஒருவாறு மயக்கமும் குழப்பமும் நீங்க அவள் தான் தனது கட்டிலின் மேல் படுத்திருப்பதாகத் தெளிந்தாள். அவளுக்கெதிரே தோன்றிய அழல் அடுப்பறையிலே எரிந்து கொண்டிருந்தது என்பது புலப்பட்டது. அப்பொழுது இரவு நேரம். மின் விளக்குகள் இல்லாத காலம்; மெழுகுதிரி விளக்கு ஒன்று கைம்மேடையின் மேல் எரிந்து கொண்டிருந்தது; அவளது கால் மாட்டில் காளி கவலை தேங்கிய முகத்தோடு நின்று கொண்டிருந்தாள். தலைப் புறத்தில் இடப்பட்டிருந்த நாற்காலியின் மீது உட்கார்ந்திருந்த ஒரு பெரியவர் சற்றுகுனிந்து பூங்கோதையைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

பூங்கோதையின் உள்ளத்தில் தனக்கும பாதுகாப்பு உண்டு போலும் என்கிற ஆறுதல் தோன்றியது; காரணம், செங்கமலத்தம்மையாரின் தனியாட்சிக்கு உட்படாத ஒரு புதியவர் அவளருகே தோற்றம் அளித்தது தான். அப்பெரியவரைப் பூங்கோதைக்கு முன்னரே தெரியும் அவருடைய பெயர் கருப்பன் செட்டியார். குயிற் பொதும்பரில் எண்ணெய் வாணிகம் செய்து கொண்டு வந்தார். துணைத் தொழிலாக மருத்துவமும் செய்துவந்தார்.

(தொடரும்)

நாணுத்தரும் !

ஔவை நடராசன்

ஒரு மொழி வருவதனால் பிறிதொரு மொழி கெடும் என்பார் கூற்றினைச் சிலர் எள்ளி நகையாடுகின்றனர். தமிழ்மொழியோடு வடசொற்கள் கலந்தமையாலேயே மலையாளம், கன்னடம் என்னும் மொழிகள் தோன்றின என்பது மொழி நூலாரின் முடிபு. இன்றும் சிலர் ஆங்கிலச் சொற்களையும் பிற மொழிச் சொற்களையும் தமிழ் உரையாடலில் இழைய விடுதலால் இனிய தமிழ்ச் சொற்கள் மறைந்து போவதை நாம் அறிவோம். இலண்டன் மாநகரில் தமிழர் ஒருவரோடு ஒரு செருமானிய அறிஞர் உரையாடியபோது அத்தமிழர் தம் உரையாடலில் தமிழ்ச் சொற்களோடு ஆங்கிலச்சொற்களையும் கலந்து பேசினராம். அது தமிழுக்கு ஆக்கமன்று. "இனிய தமிழுக்கு நேரும் பெரிய இடையூறு" என அவர் குறிப்பதோடு அது பெரியதொரு தீவினையென்றும் அச்செருமானியர் குறித்துள்ளார். இக்கலவைச்சொற்களால் புதிய மொழி ஒன்று தோற்றம் பெற்றாலும் வியப்பதற்கில்லை என்கிறார்.

(I only want to express my concern about what I consider to be a very dangerous situation. Here lies a fertile ground for yet another "language" as is the case of Malayalam and Telugu, with all the fissile and divisive consequences that it inplies.)

(Tamil Culture, Page 137, Oct. Dec. 1963)

மேலை நாட்டார் செல்வத்தினைக்கொண்டு தொழில் வளம் பெருக்குதலில் தளராத அரசியற் பெருமக்கள், இச் செருமானிய அறிஞரான எயின்சுடிட்டில்பாக் என்பவர்கூறும் இம்மொழியியல் உண்மையைப் போற்றுவாராக இங்ஙனம் சான்றோர் கூறும் உரைகளை எண்ணாது, ஒரு மொழியினைப் புகுத்துவதில் ஆர்வம் காட்டுதலால் தமிழரின் 'இலம்பாடு நாணுத்தரும்' என்றன்றோ இரங்க வேண்டியுள்ளது!

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருத்தரங்கம் ... ...

பிரித்துரைக்கப் படவில்லை சட்டத்தில். உண்மை இவ்வாறிருக்க இந்திக்கு மட்டும் ஆளும் தகுதி கிட்டுமானால்; இட்ட உறுதி மொழிகளும்! ஏக இந்தியச் சம ஒற்றுமையும் காற்றில் பறக்க விட்டதாகத் தானே பொருள்? வரலாற்றுத் துணையோடு இலக்கிய இலக்கண வளத்தோடு தமிழும், வங்காளமும் தலை நிமிர்ந்திருக்க, புறக்கடையில் நுழைந்து வந்த புன்மை மொழி இந்திக்கு அரசாளும் தகுதி எனில் அநீதி வேறுண்டோ? அதனை எதிர்த்துத்தான் தமிழறிந்த நாவலர்களும்; தமிழ்க்காவலர்களும், பேராசிரியர்களும் பெரும் போரிடப் புறப்பட்டு இருக்கின்றனர்.

7. அருமை நண்பரின் இந்தக் கேள்வியில்தான் அவரது உண்மை வடிவம் அடங்கி இருக்கிறது என அறிகிறேன். இத்துணைக் கேள்விகளையும் 'எழிலிமைய'ம் போல் கேட்டு விட்டு; "வேண்டாத இந்த மொழி விசயத்தில்.." என்று கூறி விட்டீரே. வெற்று வேலைதானே இது உமக்கு. மூளைத் தெளி விருந்தால் இப்படிக் குறிப்பிட்டிருப்பீரா? ஆனாலும் சொல்கிறேன் கேளும்; மாலைக்கண்ணர்களின் மதி மயக்கத்திற்கு; சோலைக்கொடிபூத்தச்சுந்தரக் "குறள் நெறி" மலராம் இது வாடிவிடாது. தமிழ் வளர்ச்சி ஒன்றே குறள் நெறியின் தலையாயக்கடன். அதன் முழக்கம் தனிப்பட்ட கட்சியொன்றினுக்குப் பலம் தருவதாக இருக்கிறதென்றால்; உம் போன்றப் பத்தாம் பசலிகள் தமிழின் மீது பற்று வந்து விட்டதாக நடித்துக் கொண்டு, தேசியத் திருவடிக்குத் தாசராகித் தெளிதேன் தமிழை அடகு வைக்கும் தீச் செயலை விடக்கொடிய தல்ல என உணர்த்த விரும்பகிறேன். மொழி வழியும் மொழியின் பாற்பட்ட இனவழி தேசியம் உருவாகாது. என்றோ எக்காரணத்துக்கோ உருவான இந்தியத்தேசியத்திற்கு இன்றமிழைப் பலியிடும் உம்மைப் போன்றவர்கள் தமிழுக்கு மகனாய்ப் பிறந்ததே தவறு. இனியேனும் உண்மைத் 'தமிழ்ப்பற்றிருந்தால்', தன்மானத் தமிழ் உணர்வு கொஞ்ச மேனும் மீதமிருந்தால் இது போன்ற பொருளற்ற கேள்விகளைக் கேட்டு நல்லவர்களைப் புண் படுத்தாதீர். தைரியமாக இறங்கும் இந்தி மொழி எதிர்ப்புப் போராட்டத்தில் துணைக்கு நானிருக்கிறேன்; சாவதெனில் உமக்கு முன் நான் இறக்கிறேன்.

குறிப்பு :நீர் இந்தி ஒழிப்புப் போராட்டத்தில் இறங்கி விடப்போவதாகக் கூறி இருக்கிறீர்; அவ்வளவு சிரமம் கூட உமக்கு வேண்டாம், அதற்கு ஆயிரமாயிரம் பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னுயிரையும் தரும் இலட்சிய வீரர்களுக்காக நீர் ஒருசொட்டுஅனுதாபக் கண்ணீர்கூடவிட வேண்டாம். நீர் பைந்தமிழுக்காக உயிர் நீத்த சின்னச் சாமியைப்பைத்தியமென்று கூறியதாக ஒருநாளிதழில்படித்தேன் இனியேனும்அது போன்ற பைத்தியக்காரத்தனமான செயலில் ஈடுபடாமலிருந்தால் அதுவே போதும்.

மதுரைத் தனிப்பயிற்சிக் கல்லூரி

Mathurai Tutorial College

Special Coaching for English

கல்லூரியில் சேர்விழையும் S. S. L. C. மாணவர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி வகுப்புகள் 3—4—64 முதல் 3—6—64 வரை நடைபெறும். விடுமுறையை வீணாக்கவேண்டாம் 30 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

மகளிருக்கும் இடமுண்டு. விடுதி வசதி உண்டு.

தகவல் : M. T. C.
G. K S. Rest House, (Near College House,
Town Hall Road, MADURAI-1.

கு. இளஞ்சேரன், எம். ஏ.
முதல்வர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: பேராசிரியர் சி. இலக்குவனர், கருமுத்து அகம், மதுரை-6.
அச்சிட்டோர்: கு. திரவியம், மேலாளர், கலைக்கோயில் அச்சகம், 62, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.